விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 29 சனிக்கிழமை (11.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 054

# ஒருமித்த குரலில் பலம்மிக்க திரள்வு

# "எழுக தமிழ்" நேற்று கிழக்கிலும் பேரெழுச்சி





(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எழுக தமிழ் பேரணி மீண்டும் ஒரு பேரெழுச்சியுடன் கிழக்கு மக்களின் பேராதரவுடன் நேற்றையதினம் எவ்வித குழப்பங்களும் இன்றி நடைபெற்றது. ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை, இராணுவ வெளியேற்றம், தமிழர்களை தேசமாக அங்கீகரித்தல், நிரந்தர தீர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுக் காலை மட்டக்களப்பு கல்லடிப்பாலம் அருகாமையில் நடந்த பேரணியில் மக்கள் பல்லாயிரக்கணக்கில் ஒன்று திரண்டனர். முற்பகல் 10 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், எழுக தமிழ் கொடியை அசைத்து பேரணியை ஆரம்பித்து வைத்தார். ஆயிரம் ஆயிரம் உறவுகள் கொல்லப்பட்டும் அடக்குமுறைகளுக்குள்ளாகி நீதி மறுக்கப்பட்டு கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு நீதி கோரும் வகையில் அலையென திரண்டு வடக்கில் பங்கேற்றது போன்று கிழக்கு எழுக தமிழ் பேரணிக்கு மக்கள் பேராதரவு வழங்கியிருந்தனர். (24-ம் பக்.)

## அரச தரப்பு தீர்மானங்களின்படி
## பயங்கரவாதிகள் என எம் மக்கள் மீது முத்திரை
### எழுக தமிழில் விக்னேஸ்வரன் சாடல்



(ஏறாவூர் - தும்பங்கேணி)

அரசு நினைத்தால் ஒருவர் பயங்கரவாதி, இல்லையேல் அவர் ஒரு சாதாரண குற்றவாளி என வடமாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான சி.வி.

24ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் முறையில் மாற்றங்கள்

ஆறுதல் நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற கருத்தூன்றல் களத்தின் ஒன்பதாவது கலந்துரையாடலில் "தேர்தல் முறையில் மாற்றங்கள்" என்ற தொனிப் பொருளில் நடைபெறவுள்ளது.

இடம் : ஆறுதல் நிறுவனம், இல.51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

காலம் : 12.02.2017 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி

அனைவரையும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைக்குமாறு வேண்டுகின்றோம்.

(C-7517)

தொடர்புகளுக்கு : 021 221 7092

## தமிழ் மக்கள் பேரவையின் கிழக்கு எழுக தமிழ் பிரகடனம்

(தும்பங்கேணி)

மட்டக்களப்பில் நேற்று வெள்ளிக்கிழமை தமிழ் மக்கள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட எழுக தமிழ் பேரணியின் போது தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களுள் ஒருவரான த.வசந்தராஜாவினால் வாசிக்கப்பட்ட எழுக தமிழ் பிரகடனம் வருமாறு,

2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு நகரில் முன்னெடுக்கப்படும் "எழுக தமிழ்" பேரணியானது, தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் - பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பங்குபற்றலுடன் எழுப்பப்படும் தமிழ்

04ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு முதல்வருக்கு அமோக வரவேற்பு

(மட்டக்களப்பு)

கிழக்கில் இடம்பெற்ற எழுக தமிழ் மக்கள் எழுச்சி பேரணியில் பங்கேற்றிருந்த வடக்கு மாகாண முதலமைச்சரை அங்கு கூடியிருந்த மக்கள் பலத்த கரகோசங்களுடன் வரவேற்றத்துடன் ஆர்ப்பரித்தபடி தமது ஆதரவையும் விருப்பத்தையும் உணர்ச்சிபொங்க வெளியிட்டிருந்தமையையும் காணக்

23ஆம் பக்கம் பார்க்க....

## கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் நேற்று மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிர

24ஆம் பக்கம் பார்க்க...

### பரபரப்பான சூழலில் தமிழகம்
## ஆட்சி அமைக்க சசிகலாவை அழைக்க முடியாது - ஆளுநர்



(சென்னை)

தமிழகத்தின் தற்போதைய சூழலில் சசிகலாவை ஆட்சி அமைக்க அழைக்க முடியாது என மத்திய உள்துறை அமைச்சருக்கு தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ், 3 பக்க அறிக்கை அனுப்பி உள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எம்மக்களின் உரிமைகளை மறுக்கின்ற தீர்வு வேண்டாம்

## கஜேந்திரகுமார் வலியுறுத்து



(பழுகாமம்)

எங்களுடைய மக்களின் உரிமைகளை உள்ளடக்கிய தீர்வினை நீங்கள் அங்கீகரிக்காவிட்டால் எந்தவித அரசியல் அமைப்பையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம என்ற செய்தியினை நாங்கள் இன்று நேற்றல்ல தொடர்ச்சியாக இடைவிடாது 65 வருட காலங்களாக கூறி வருகின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். மட்டக்களப்பு நாவற்குடா மைதானத்தில் நேற்று நடைபெற்ற எழுக தமிழ் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மக்கள் பேரவை எழுக தமிழை நடத்துவது எந்தவித கட்சிக்கு எதிராகவோ அல்லது எந்தவொரு தனிபருக்கோ ஆதரவாகவோ அல்லது எதிராகவோ நாங்கள் இந்தப் பேரணியை முன்னெடுக்கவில்லை. எமது தமிழ் மக்களை ஏமாற்றி பிழையான பாதையில் கொண்டு செல்வதில் இருந்து எமது மக்களின் தீர்மானத்திற்கு அமைய அவர்களை சுயமாக இயங்க செய்வதற்காகவே இதனை நாங்கள் நடத்துகின்றோம். தமிழ் மக்கள் தீர்வு விடயத்தில் எந்தவித விட்டுக்கொடுப்பும் இல்லாமல் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளனர்.

எமது மக்களின் உரிமைகளை பெறுவதாக இருந்தால் தேசிய அங்கீகாரத்துடன் நாங்கள் பொருளாதாரம், சமூகம், சமய ரீதியில் சிங்களமக்களுக்கு சமமான தீர்வினை தரவேண்டும். எங்களுடைய மக்களின் உரிமைகளை உள்ளடக்கிய தீர்வினை நீங்கள் அங்கீகரிக்காவிட்டால் எந்தவித அரசியல் அமைப்பையும் நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்ற செய்தியினை இன்று நேற்றல்ல தொடர்ச்சியாக இடை விடாது 65 வருட காலங்களாக நாங்கள் கூறியுள்ளோம்.

தற்போது அமைக்கப்பட்டு வரும் அரசியல் அமைப்பு தமிழ் மக்களின் தீர்மானத்துக்கு அமைவாகவே அமைக்கப்பட்டு வருவதாக சர்வதேசத்திற்கு இலங்கை அரசாங்கம் கூறிவருகின்றது. அண்மையில் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் இச்செய்தியானது 64 நாடுகளுக்கு கூறப்பட்டு வருகின்றது. ஒற்றை ஆட்சியினால்தான் நாங்கள் அழிந்துகொண்டு வருகின்றோம். எமது மக்களினால் தொடர்ச்சியாக 65 வருடகாலம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை புறந்தள்ளி அதனை மீறி எமது பெயரை பயன்படுத்தி சில விடயங்களை ஐ.நா. சபையிலே நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது அரசியல் மோசடியாகும். இதனை சம்பந்தப்பட்டவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கான பொறுப்புக் கூறல் என்பது தற்போது தேவையில்லைஎனஎம்மவர்களினால் உலக நாடுகளுக்கு எடுத்துரைக்கப்படுவதுடன் இத் தீர்மானத்தினை இரண்டு வருடம் ஒத்திவைக்குமாறும் கூறியுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு மத்தியில் எமது மக்களின் ஒற்றுமையின் பலத்தினை உலகறிய செய்யவேண்டும் என்பதற் காகவே இது நடைபெறுகின்றது. எழுக தமிழ் இடம் பெறுவதால் எவரும் எவருக்கும் வாக்கு கேட்பதில்லை. வாக்களிப்பதுமில்லை இது தேர்தல் களம் அல்ல. அதனை நீங்கள் சரியான கோணத்தில் விளங்கிக் கொள்ள வேண்டும். எமக்கு மென்வலு ஒரு போதும் தீர்வைத்தராது.

இது எமக்கு தேவையில்லை. மாறாக மக்கள் வலுவே எமக்கு தேவை. இதுவே தீர்வினை பெற்றுத்தரும் என்பதனை மக்களே நீங்கள் புரிந்து கொள்ளுங்கள் என அவர்மேலும் தெரிவித்தார். (இ-4.5)

# சந்தேக நபர் கைது

(மட்டக்களப்பு)

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டின்பேரில் 60 வயதுடைய ஒருவரை நேற்று முன்தினம் நண்பகல் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து குறித்த இடத்துக்குச் சோதனை மேற்கொண்டபோது, சந்தேகநபரிட மிருந்து 10 சாராயப் போத்தல்கள் இருந்தமை தெரியவந்தது.

இதனை அடுத்து, சாராயப் போத்தல்களைக் கைப்பற்றியதுடன், சந்தேக நபரைக் கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (5)

# வன்னியில் பன்றிக் காய்ச்சல் இதுவரை மூவர் கண்டறிவு

## கிளிநொச்சி சுகாதார பிரிவினர் எச்சரிக்கை

(பரந்தன்)

வன்னியில் பன்றிக் காய்ச்சல் நோய் காணப்படுவதாகவும் இது வரை மூன்று பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி சம்புக்குளம், முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு றெட்பானா மற்றும் மாங்குளம் பிரதேசத்தில் பெரியகுளம் ஆகிய பிரதேசங்களில் மூன்று சிறுவர்களுக்கு பன்றிக காய்ச்சல் நோய் அடையாளம் காணப்பட்டுள்ளது எனவும் சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அத்தோடு எச்சரிக்கை அடிப்படையில் கீழ் குறிப்பிடப்படும் நோய் அறிகுறிகள் காணப்படுகின்றவர்கள் உடனடியாக அரச வைத்திய சாலையை நாடி உரிய பரிசோதனை மற்றும் சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதன்படி கிளிநொச்சி சுகாதார துறையினர் விடுத்துள்ள அறிவித்தல் வருமாறு, வைரஸ் காய்ச்சல் என்பது புதிய நோய் அல்ல. காலத்துக் காலம் இவ் வாறான இன்ப்ளுவன்சா வைரஸ் காய்ச்சல் பரவுவதுண்டு. சிலவேளைகளில் தாக்குதிறன் கூடியவைரஸ் வகைகள் தொற்றும்போது கடுமையான விளைவுகள் மனிதருக்கு ஏற்படும்.

இலங்கையில் தற்போது H1N1 என்ற வைரஸ் தாக்கத்தால் ஒரு வகை காய்ச்சல்நோய் பரவிக்கொண்டு இருக்கிறது. இது கர்ப்பிணித் தாய்மார், பிரசவத்தின் பின்னரான தாய்மார், இரண்டு வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், 65 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள், முட்டுவருத்தம், சல ரோக வருத்தம் உடையவர்கள் ஆகியோரை தாக்கும் போது விளைவுகள் கடுமையாக இருக்கும்.

எனவே கர்ப்பகாலத்தில் இவ் வகை நோய்கள் ஏற்படும் போது மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

கர்ப்பகாலத்தில் இவ்வகை நோய்கள் ஏற்படும் போது மிகக் கடுமையான விளைவுகள் ஏற்படும்.

உரிய சிகிச்சை இல்லையென்றால் இதன் விளைவுகள் மிகவும் பாரதூரமாக இருக்கலாம். இந்நோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்து சரியான சிகிச்சையை வழங்கினால் உரிய நேரத்தில் தேவையற்ற தாய் - சேய் உயிரிழப்பை தடுக்கலாம்.

கர்ப்பிணித் தாய்மாருக்கு இதய வருத்தம், முட்டு, சலரோகம் போன்ற நோய்கள் இருந்தால் இந் நோயின் தாக்கம் மிக அதிமாக இருக்கும்.

நோயின் அறிகுறிகளாக பின் வருவன காணப்படும் இடத்து உடனடியாக அரச வைத்தியசாலையை நாடி உரிய சிகிசை பெற்றுக்கொள்ளுமாறும் பொது மக்களை சுகாதார பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அதாவது சளிக்காய்ச்சல், தடிமன், தொண்டைப் புண், மூக்குச் சளி, தலையிடி, உடல் நோ என்பன காணப்படுவதோடு, நோயின் அபாய அறிகுறிகளாக அதிகூடிய காய்ச்சல், மூச்சுவிட முடியாமை, நெஞ்சுநோ, மறதிக் குணம், நெஞ்சுப்படபடப்பு, வலிப்பு, வயிற்றோட்டம் என்பனவும் காணப்படும்

சாதாரண வைரஸ் காய்ச்சலிலிருந்து இந்த H1N1 வைரஸ் காய்ச்சலினை வேறு பிரித்து அறிவது கடினமாகும். தகுந்த ஆய்வுகூட மற்றும் நிபுணத்துவ சேவையும் விசேட வைத்திய நிபுணர்களது நேரடிக் கண்காணிப்புமே H1N1 வைரஸ் காய்ச்சலினை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கு அவசியமாகும் எனவும் அறிவித்துள்ளனர். (செ-312)

# உரிமைகளை மீட்டெடுக்க தயார் நிலையில் மக்கள்

## சுரேஸ் சுட்டிக்காட்டு



(மட்டக்களப்பு)

இந்த தீராத வெயிலுக்குள்ளும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டுள்ளார்கள். ஆனால் இங்கு எழுக தமிழ் நடக்கக் கூடாது என முன்னாள், இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வேலை செய்திருந்தார்கள். நேற்றைய தினமும் கூட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று செய்துள்ளார்கள். ஆகவே தமிழ் மக்களுடைய இரத்தத்தோடு ஒன்றிய உரிமைகளை மீட்டெடுக்க மக்கள் எப்போதும் தயாராகவே உள்ளார்கள் என்பதனை குறுகிய அரசியல் இலாப நோக்கோடு செயற்படும் இவ்வாறானவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் எழுக தமிழ் நடைபெற்ற போது அதனை குழப்ப முயன்றவர்கள் மூக்குடைபட்டார்கள். இங்கும் அதனை குழப்புவதற்கு முயன்று மூக்குடைபட்டுப்போய் நிற்கின்றார்கள். எதிர்காலத்தில் இவ்வாறான தவறான சிந்தனைகளுக்கு இங்குள்ள மககள் எடுபடக்கூடாது என்பதனை நான் சுட்டி காட்டுகின்றேன் என யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ்பிரேமச் சந்திரன தெரிவித்துள்ளார்.

கிழக்கில் எழுக தமிழ் பேரணியில்உரையாற்றும்போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-4)

# மிகப்பெரிய சாதனை கிழக்கில் நிகழ்ந்துள்ளது

## சித்தார்த்தன் எம்பி பெருமிதம்



(மட்டக்களப்பு)


கிழக்கில் இன்று தமிழ் மக்களுடைய சரித்திரத்திலே ஒரு மிகப்பெரிய சாதனையொன்றே நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக மிகப் பெரிய அளவிலே தங்களுடைய அடிப்படை உரிமைகளை என்றுமே விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்பதை மிகத் தெளிவாக மிக உரத்த குரலிலே கூறியிருக்கின்றார்கள். எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியிலும் இந்த சுட்டெரிக்கும் வெயிலிலும் இங்கு நீங்கள் கூடியிருக்கின்றீர்கள் என்றால் நிச்சயமாக உங்களுடைய குரல்கள் சர்வதேசத்திற்கும், ஐக்கிய நாடுகள் சபைக்கும் அரசுக்கும் மிகத் தெளிவாகக் கேட்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவித்துள் ளார்.

கிழக்கில்எழுக தமிழ் பேரணியில நேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-4)



# கிழக்கில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் அலையென திரண்ட மக்கள்












(படங்கள் : உ.சாளின் - வ.சக்திவேல்)

# தமிழ் மக்கள் பேரவையின்...

தேச இறையாண்மையின் குரலாகும்.

சிங்கள பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வரும் தமிழ் தேசமானது - தனது அடிப்படையான அரசியல் உரிமைகளில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங்கள தேசத்திற்கும், இலங்கைத் தீவின் மீது கரிசனை கொண்டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் வலியுறுத்துவதே இந்த "எழுக தமிழ்"பேரணியின் நோக்கமாகும்.

இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு பிராந்தியம் தமிழர்களின் பூர்வீகத்தாயகபூமி ஆகும். மாறி மாறி ஆட்சியமைத்த இலங்கை அரசாங்கங்கள் குறிப்பாகக் கிழக்கை இலக்கு வைத்து மேற்கொண்ட திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களினூடாகத் தமிழ் மக்களின் நிலத்தையும், பொருளாதாரத்தையும், பண்பாட்டையும், மொழியையும் அழித்து வருகின்றன. எல்லாவற்றுக்கும் உச்சமாக - தமிழர் தேசத்தைச் சிங்கள மயமாக்கி, அதன் அடையாளத்தையும் கூட்டிருப்பையுமே சிதைத்து வருகின்றன. இதுவே தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டுவரும் ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணியில் தமிழர் தேசம்காக்கப்பட வேண்டுமாயின், தமிழினத்தின் நிலம், மொழி, பொருளாதாரம், பண்பாடு, அதன் தனித்துவமான அடையாளம் என்பன - ஒட்டுமொத்தமாக ஒரேயடியாகக் காக்கப்பட வேண்டும் என்பதே இந்த பேரணியின் தீர்மானமாகும். இந்த தீர்மானத்தின் அடிப்படையில் - எமது இனத்தின் சமூக பொருளாதார - அரசியற் தனித்துவம் காக்கப்பட வேண்டுமாயின், கிழக்கின் தமிழர்களாகிய நாம், எம்மிலிருந்து வடக்கு பிரிக்கப்படாதவாறான சுயாட்சியலகு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதையும், இந்தநிலைப்பாடு எந்தவித விட்டுக் கொடுப்பிற்கும் அப்பாற்பட்டது என்பதனையும் மட்டக்களப்பில் நடைபெறும் இந்த எழுக தமிழ் பேரணியின் ஊடாக குறிப்பாகவும் திட்டவட்டமாகவும் பிரகடனப்படுத்துகின்றோம். மேலதிகமாக வடக்கில் - யாழ்ப்பாணத்தில் - 2016ஆம் ஆண்டு செப்டெம்பர் 24ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட எழுக தமிழ் பேரணியின் போது பல்லாயிரம் தமிழ் மக்கள் திரண்டு மேற்கொண்ட கீழ்வரும் பிரகடனத்தினை - அதன் ஒவ்வொரு அம்சங்களையும் - அவற்றின் அதே அரசியல் அர்த்தங்களோடு - இந்த பேரணி மீளவும் வலியுறுத்துகின்றது.

1. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை வலிந்து பௌத்த சிங்களமயமாக்கும் நோக்குடன் சிங்களக் குடியேற்றங்களும், பௌத்தவிகாரைகளும், புத்தர் சிலைகளும் இவ்வாட்சியிலும் அரசின் அனுசரணையுடனும், இராணுவத்தின் உதவியுடனும் உருவாக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களுடைய இன அடையாளத்தை அழிக்கவும், வட.கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களின் குடிப்பரம்பலை வலிந்துமாற்றவும் அரசு எடுத்து வரும் இவ்வாறான சகல நடவடிக்கைகளையும் உடன் நிறுத்துமாறு இம் மக்கள் பேரணி வலியுறுத்துகின்றது.

2. யுத்தம் நிறைவடைந்து ஏழு வருடங்கள் ஆகிய நிலையிலும் இராணுவம்மிகச் செறிவாக வட. கிழக்கில் குவிக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவம் தமிழர் தாயக பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணியை சுவீகரிப்பு செய்தது மாத்திரமல்லாமல், தொடர்ந்தும், தமிழ் மக்களின் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது.

மேலும் உல்லாச விடுதிகள், விவசாய பண்ணைகள், இதர வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதுடன், வடக்கு கிழக்கு நிர வாகத்திலும் தொடர்ந்தும் தலையிட்டு வருகின்றது. வட. கிழக்கு தமிழர் தாயக பிரதேசங்களில தமிழர் தமது வாழ்வாதாரத்திற்காக தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு இராணுவத்தில் தங்கி தமது பொருளாதாரத்தை தாமே பொறுப்பேற்க முடியாத நிலையையும், இராணுவமயமாக்கலினூடு தமிழ் சமூகத்தினை பிளவுபடுத்தி, சமூக உறவுமுறைகளை சிதைத்து, தமிழர்கூட்டாக ஜனநாயக ரீதியில் அணி திரள்வதற்கு இடையூறாகவும் இராணுவம் நிலவி வருகிறது. பெண்கள், சிறுவர்களுக் கெதிரான இராணுவத்தினரின் பாலியல் வன்முறைசம்பவங்களும் தமிழ் தேசத்தின் இருப்பை சிதைக்கும் வழிவகைகளே. இதனால் வட. கிழக்கு தாயகத்திலிருந்து உடனடியாக இராணுவத்தை வெளியேற்றுமாறு இப்பேரணி வலியுறுத்துகின்றது.

3. தமிழ் இனப் படுகொலைக்கான நீதித் தேடலில் - உள்ளகப் பொறிமுறை பயனற்ற - சாத்தணியமற்ற - ஒன்று எனத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றனர். ஐ. நா. மனித உரிமை ஆணையாளரின் செப்டெம்பர் 2015 அறிக்கை மிகத் தெளிவாக இலங்கையின் நீதித்துறை யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி வழங்க தகைமையற்றது எனக் கூறியது. இருப்பினும் ஐ.நாவின் அங்கத்துவநாடுகள் இணைந்து கலப்பு பொறிமுறை ஒன்றை இலங்கைக்கு பொருத்தமானது என தமது செப்டெம்பர் 2015 பிரேரணை மூலம் விதந்துரைத்தனர். அதனை ஆரம்பத்தில் ஏற்றுக் கொண்ட இலங்கை அரசாங்கம் தற்போது வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க முடியாது எனத் தெளிவாக அறிவித்து விட்டது. கலப்பு பொறிமுறையை நிராகரித்து, மீள உள்ளகப் பொறிமுறையை மட்டுமே முன்வைக்கின்றது. அத்தோடு, அதனைச் செய்வதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசத்தை மேலும் நீடித்துத் தருமாறும் தற்போது கோரி நிற்கின்றது. இந்த பின்னணியில், இலங்கை அரசாங்கத்திற்கு எத்தகைய கால நீடிப்பும் வழங்கப்படக் கூடாது என வலியுறுத்துவதோடு, தமிழ் இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணையை மட்டுமே தமிழ்மக்களின் ஏகோபித்த நிலைப்பாடாக இந்த பேரணி வலியுறுத்தி நிற்கின்றது.

4. கடந்த 35 வருடங்களுக்கு மேலாக நிலவிவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் சிலர் 15 - 20 வருடங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்தனர். 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திற்கு உறுதி மொழி கொடுத்தும் இது வரை பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை என்பதுடன் தொடர்ந்தும் பல இளைஞர்கள் அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் வாழும் அரசியல்கைதிகள் அனைவரும் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்பதுடன் பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பேரணி வலியுறுத்துகின்றது.

5. போர் நிகழ்ந்த கால கட்டத்திலும், அரசியற் காரணங்களுக்காகவும் கடத்தப்பட்டும், சரணடைந்த பின்பும் காணாமல் போகச் செய்யப்பட்ட ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ் மகளும் எங்கு இருக்கின்றார்கள் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என உடனடியாகக் கண்டறிந்து பகிரங்கப்படுத்தப்படுவதுடன் அவர்களுக்கு நீதி வழங்கப்படவும் வேண்டும்.

6. யுத்தம் நடந்த காலகட்டங்களில் கடற்படையினரின் தடை உத்தரவு காரணமாக வடக்கு கிழக்கு மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்திருந்தனர். ஆனால் யுத்தம் நிறைவடைந்து ஏழுவருடங்கள் ஆகிய நிலையில், இன்றும் கூட வடக்கு கிழக்கு மீனவர்கள் தொடர்ச்சியான பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

தென்னிலங்கை மீனவர்கள் வட.கிழக்கு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைவது மாத்திரமின்றி, வடக்கு, கிழக்கு மீனவர்களின் படகுகளை சட்டவிரோதமாக கைப்பற்றுவதாலும், நிரந்தர தங்குமிடங்களை அத்துமீறி அமைப்பதனாலும் தமிழ் மீனவர்கள் தமது சொந்த மீன்பிடி இடங்களில் இருந்தே விரட்டப்படுகின்ற சூழல் உருவாகி வருகின்றது.

மேலும் தென்னிலங்கை மீனவர்கள், வட.கிழக்கு கடற்பிரதேசங்களில் சட்ட விரோதமான மீன்பிடி முறைகளை கையாள்வதால்தமிழ் மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்தும்வருகின்றார்கள். இதன் காரணமாக ஒட்டு மொத்தமான தமிழ் மக்களின் பொருளாதாரமும் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பேரணி வலியுறுத்துகின்றது.

இந்திய மீனவர்களின் சட்ட விரோத மீன்பிடி முறைகளாலும் தமிழ் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அன்றாடத் தொழில் செய்துபிழைக்கும் மீனவர்களின் வாழ்வாதார உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுடன், தமிழ் மீனவர்களின் கடல் வளங்கள் அத்துமீறி, சட்டத்துக்கு புறம்பாக சூறையாடப்படுவதை இப்பேரணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

7. விடுதலைக்காக போராடிய தேசிய இனங்கள் மத்தியில் அவர்களின் விடுதலை வேட்கையை அழிக்கும் பொருட்டு போதைவஸ்துக்களை இளைஞர்கள் , யுவதிகள் மத்தியில் பரப்பும் வழிமுறைகளை பல நாடுகளின் அரசுகள் கையாண்டுள்ளன.

தமிழர் தாயகத்தை ஆழமான இராணுவ கண்காணிப்புக்குள் வைத்திருக்கின்றபோதிலும் பெருமளவான போதைவஸ்துப் பொருட்கள் எமது பிரதேசங்களினுள் ஊடுருவ விடப்படுகின்றன. மேலும், ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களும், வடக்கு கிழக்கில் வேகமாகப் பரவிவருவதுடன், வட.கிழக்கில் இராணுவத்தினால் நடத்தப்படும்விளையாட்டு விழாக்களின் போது தமிழ் இளைஞர்களிடையே மதுபாவனையை இராணுவம் நேரடியாக ஊக்கப்படுத்துவது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவை அனைத்தும் எமது இளம் சந்ததியின் எதிர்காலத்தை திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளாகவே நோக்க வேண்டியுள்ளது. இவற்றை நிறுத்தவும், கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென இப்பேரணி வலியுறுத்துகின்றது. அரசியல் தீர்வு சம்பந்தமாக இன்னமும் தீர்வுகாணப் படாத தமிழ் தேசிய இனப்பிரச்சினையினதும், நடந்து முடிந்த போரினதும் - நேரடி மற்றும் நேரடியற்ற விளைவுகளான மேற்கூறப்பட்ட அரசியற்-பாதகங்கள் எதுவும் மீண்டும் நிகழாதவாறு தமிழ் மக்கள் பேரவையினால் முன் வைக்கப்பட்ட அரசியற் தீர்வு முன்மொழிவின் அடிப்படையில் ஒருசுயாட்சித் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்தப் பேரணி பிரகடனம் செய்கின்றது. தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனும் நோக்கில் 3ஆவது குடியரசு அரசியல் யாப்பை கொண்டு வருவோம் என்று இவ்வரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு கூறி வருகின்றது. ஆனால் இலங்கை அரசின் ஜனாதிபதியும், பிரதமரும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு வரும் எனவும் பௌத்தத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள முன்னுரிமையில் மாற்றம் வராது எனவும் தொடர்ந்தேர்ச்சியாக கூறி வருகின்றனர். ஒற்றையாட்சிக்குள் ஒரு குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வை தமிழருக்கான தீர்வாக திணிக்க இவ்வரசாங்கம் முயற்சிக்கின்றது. அவசர அவசரமாக ஓர் அரசியலமைப்பை பாராளுமன்றில் நிறைவேற்றி பொதுசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் புதிய அரசியலமைப்பு ஒன்றிற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற அரசாங்கம் முயற்சிக்க இருக்கின்றது. தமிழ் மக்களில்பெரும்பான்மையினரின் வாக்கு புதிய அரசியலமைப்பிற்கு கிடைத்தால்அதை வைத்து தமிழ் மக்களிற்கு அரசியல் தீர்வொன்றை வழங்கிவிட்டதாக அர்த்தப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம். புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் அபிலாஷைகளை அங்கீகரிக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை. தமிழர்கள் புதிய அரசியலமைப்பு எப்படியாக இருக்க வேண்டும் எனக் கருத்துக் கூறுவதோ, கூட்டாக நிலைப்பாடு எடுப்பதோ, அது தொடர்பில் ஜனநாயக ரீதியாக அணிதிரள்வதோ அரசியலமைப்பாக்க முயற்சியை குழப்ப எடுக்கும்நடவடிக்கையாக சித்தரிப்பதை நாம் கண்டிக்கின்றோம்.

அந்த வகையில்பின்வரும் நிலைப்பாடுகளை இப்பேரணி எடுக்கின்றது.எனவே,

அ. தற்போதைய அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் எமக்கு தந்தபடிப்பினையின் அடிப்படையிலும், இலங்கை அரசியலின் சிங்கள பௌத்த மேலாதிக்க அரசியல் கலாசாரத்தில் தமிழர்களின் கடந்த 68 ஆண்டுகால கூட்டனுபவத்தின் பிரகாரமும் ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு எந்த வடிவத்திலும் சாத்தியம் இல்லை என நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

ஆ. தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில், தேசிய இனப்பிரச்சினைக்கான நடைமுறை சாத்தியமானதீர்வு. தமிழர்களை இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கில் ஒரு தேசமாக, அவர்களது சுயநிர்ணய உரிமையை மதிக்கும், தன்னளவில் இறைமை கொண்ட சுயாட்சி ஒன்றை நிறுவும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் மூலமாகவே அடையப்படும் எனக் கூறுகின்றோம். தமிழர்களின் சுய நிர்ணய உரிமையையும் அதன் வழி தமிழ்த தேசத்தின் இறைமை யையும், நிறுவன ரீதியாக, . சமஷ்டி முறைமை ஒன்றின் மூலமாக அடைந்து கொள்ளலாம் என நாம் கூறுகின்றோம்.

ஈ. தமிழர் தேசத்தின் தனித்துவத்தையோ, தமிழ் மக்களின் சுய நிர்ணயத்தையோ அங்கீகரிக்காத, உள்ளடக்கத்தில் தெளிவில்லாத அரை குறை தீர்வொன்றை ஏற்றுக் கொள்ள முடியாது என இப்பேரணி கூறுகின்றது.

உ. புதிய அரசியலமைப்பு மிகவும் இரகசியமான முறையில் உருவாக்கப்படுகின்றது. புதிய அரசியலமைப்பு தொடர்பிலாக நடத்தப்பட்ட பொது மக்கள் கலந்தாய்வு தொடர்பிலான அறிக்கை தமிழ்மக்களின் முன்வைப்புக்களை புறந்தள்ளியே சமரப்பிக்கப்பட்டுள்ளது. உருவாக்கப்படுகின்ற அரசியலமைப்பு நகல் தொடர்பிலான மக்கள் வாக்கெடுப்பிற்கு முன்னர் வெளிப்படையானதும், ஜனநாயக ரீதியானதுமான கலந்துரையாடல் ஒன்று மக்கள் மத்தியில் இடம்பெற போதுமான காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும்.

அடக்கு முறையின் கீழ் அரசியல் தீர்வு தொடர்பிலான கலந்துரையாடலை நடத்த முடியாது. வடக்கு கிழக்கில் கருத்துச் சுதந்திரத்துடன் புதிய அரசியலமைப்பு தொடர்பிலான திறந்த விவாதம் நடைபெற பயங்கரவாதத் தடைச்சட்டம் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும், இராணுவமய நீக்கம் செய்யப்பட வேண்டும் எனநாம் கூறுகின்றோம். தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில், தமிழ் மக்கள் பேரவை ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரித்தது. அதன் அடிப்படையில் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அடையப்பட வேண்டும் என இந்தப் பேரணி பிரகடனப்படுத்துகின்றது. (இ-4,5)





# கிழக்கில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் அலையென திரண்ட மக்கள்










(படங்கள் : உ.சாளின் – வ.சக்திவேல்)








# வடக்கில் மீள்குடியமர்ந்த மக்கள் தொடர்பில் அரச அதிபர்கள்

# ஜனாதிபதிக்கு சமர்ப்பித்த தரவுகளில் பாரிய வேறுபாடுகள்

## சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மீளக் குடியமர்ந்த மக்கள் தொடர்பாக அரச அதிபர்களால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளில் பாரிய வேறுபாடுகள் காணப்படுவதாக வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் 84 ஆவது அமர்வு நேற்று முன்தினம் பேரவை செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதில் 1990 ஆம் ஆண்டு வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை தொடர்பிலும் தற்போது மீள் குடியேற்றத்துக்காக பதிவுகளை மேற்கொண்டிருக்கின்ற முஸ்லிம் குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பிலும் மீள் குடியேறியுள்ள முஸ்லிம் குடும்பங்களின் காணிகள் தொடர்பிலும் முதலமைச்சரால் வெளியிடப்பட்ட தரவுகள் எந்த தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டன என்பதனையும் அதன் உண்மைத்தன்மையினையும் தெளிவுபடுத்துமாறு வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

அதற்கு பதிலளித்த முதலமைச்சர், ஆளுநரால் 2015 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதிக்கும் மற்றும் எனக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளிலும் வடமாகாண காணி ஆணையாளரின் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி பெறப்பட்ட கடிதத்தின் தரவுகளின் அடிப்படையில் வெளியிட்டிருந்தேன். அவற்றை புறக்கணிக்க வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்தார்.

ஆளுநரால் ஜனாதிபதியிடம் முன்னிலைப்படுத்தப்படும் போது குறித்த தரவுகள் அனைத்தும் பிழையானவை என சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. எனவே அவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் பா.சத்தியலிங்கம் கருத்து தெரிவிக்கையில், கடந்த ஆட்சியின் போது அரச அதிபர்களால் மீளக்குடியேறிய மக்களின் தரவுகளில் பாரிய பிழைகள் இருப்பது ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் மீளக்குடியேறிய முஸ்லிம் மக்களின் தரவுகள் மாத்திரமல்லாது அனைத்து மீளக்குடியமர்ந்த மக்களின் தரவுகளிலும் பாரிய வித்தியாசம் உள்ளது. அவை திருத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-9)

## சுவிஸ் முதன்மைச் செயலாளருடன் வடக்கு சபை உறுப்பினர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

சுவிட்சர்லாந்து நாட்டின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அரசியல் முதன்மைச் செயலாளர் டமியனோ அஞ்சலோ சுவாய்டமட்டியை வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள கெறிட்டேச் விடுதியில் சந்தித்து கலந்துரையாடினார்.

தற்போதும் தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள மனித உரிமை மீறல் விடயங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம், மீள்குடியேற்றம், யாழ். தீவக பகுதிகளின் அபிவிருத்தி, மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதில் உள்ள தடைகள் பற்றியும் இச் சந்திப்பின் போது கலந்துரையாடியுள்ளனர். (இ-9)



(யாழ்ப்பாணம்)

நல்லிணக்கபுரம் கீரிமலையைச் சேர்ந்த கேரிதாஸ் பிரதீப் என்ற ஒன்பது வயதேயான சிறுவன் நுரையீரல் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளான். இச்சிறுவனின் மருத்துவ தேவைக்கு 3 இலட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் குறித்த சிறுவன் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாக குறித்த சிறுவனின் மருத்துவ தேவைக்கு நல்உள்ளம் கொண்டவர்கள் உதவுமாறு வலம்புரி பத்திரிகையில் கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை செய்தி பிரசுரமாகியிருந்தது. இதனைக் கருத்திற் கொண்டு அரியாலை திருமகள் வாழ்மக்களிடமிருந்து குறித்த சிறுவனின் மருத்துவ செலவிற்காக ஐம்பத்து இரண்டாயிரத்து அறுநூற்று நாற்பது ரூபா (52,640/=) வைத்தியசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டது. (இ-3)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ். கோப்பாய் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் த.ஞானப்பிரகாசம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்வி பணிப்பாளர் அ. சிவநேசன் மற்றும் கோப் பாய் ஆசிரிய கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளர் அன்பரசி கருணாகரனும், கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் வள்ளுவர் கல்விநிறுவன இயக்குநருமான அ. ஜெயபாலசிங்கம் கலந்து கொள்வார். (இ-12)




## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதியோர் சங்க மண்டபத்தில இடம்பெறும். இந் நிகழ்வில் அனைத்து சிரேஷ்ட பிரஜைகளையும்தவறாது கலந்து கொளளுமாறு முதியோர் சங்க செயலாளர் ந. கனகலிங்ம் அறிவித்துள்ளார். (இ-3)

## யாழ்.மாநகர சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான நிதிச்செயற்பாடுகள் தொடர்பான ஒருகண்ணோட்டம்

யாழ்ப்பாண மாநகர சபையால் 2016 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டுத் தொகை ரூபா 857 மில்லியனாக இருந்த போதும் உண்மையாக ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 975 மில்லியனாக காணப்படுகிறது.

இதில் உள்ளூராட்சித்திணைக்களத்தால் வழங்கப்பட்ட அரசிறை மானியம் ரூபா 461 மில்லியன் தவிர்ந்த ஏனைய வருமானமாக ரூபா 514 மில்லியன் காணப்படுகின்றது.

இவற்றில் சபையால் ஈட்டப்பட்ட வருமானமாக ரூபா 263 மில்லியனும் ஏனைய நிதி மூலங்களில் இருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 215 மில்லியன் ஆகவும் காணப்படுகின்றது. சபையால் ஈட்டப்பட்ட சொந்த வருமானத்தில் சோலைவரி, தண்ணீர் விற்பனை மற்றும் களியாட்ட வரிகளாக ரூபா 65.1 மில்லியனும் கடை வாடகை/குத்தகையாக ரூபா 79.3 மில்லியனும் உரிமங்களாக ரூபா 21.7 மில்லியனும் சேவைகளுக்கான கட்டணமாக ரூபா 38.3 மில்லியனும் குற்றங்கள் தண்டங்களாக ரூபா 9.3 மில்லியனும் முத்திரைத் தீர்வையாக ரூபா34.4மில்லியனும்ஏனைய வருமானமாக ரூபா 14.9 மில்லியனும் பெறப்பட்டன என யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (இ

## நெல்லியடி சனசமூக நிலையத்தின் ஒன்றுகூடலும் பரிசளிப்பு விழாவும்



நெல்லியடிசனசமூகநிலையத்தின் வருடாந்த ஒன்று கூடலும் பரிசளிப்புநிகழ்வும்நேற்று வெள்ளிக்கிழமை நெல்லி யடி மத்திய கல்லூரி கலையரங்கில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப பணிப்பாளர் செ. உதய குமார், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்சி.புஸ்பலிங்கம், கரவெட்டி பிரதேச செயலர்ச. சிவசிறி, யா/நெல்லியடி மத் திய கல்லூரி ஓய்வு நிலை அதி பர் கலாநிதி. செ. சேதுராஜா, யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் கிருஷ்ண குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் புலம் பெயர் உறவுகளின் அனுசரணையில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண தரம், ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஆகியோருக்கு நிதியுதவிகள், துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.(இ-60)

## கலைமாணி விருது வழங்கல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சர்வோதய நிறுவனத்தினால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் 100 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கலைஞர்களுக்கு கலைமாணி விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட சர்வோதய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட தேசோதயத் தலைவர் கலாநிதி நா. தனேந்திரன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜா, சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் என். சின்னத்தம்பி, ஓய்வு பெற்ற ஆசிரியர் ஏ.ஏ.முத்துலிங்கம், இரா.செல்வவடிவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் ஈழத்து பாலசுப்பிரமணியத்தின் (கணடி) இன்னிசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (இ-3-134)

## பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரல்

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவினால் ஒவ்வொரு வருடமும் வெளியிடப்பட்டு வருகின்ற அலைமொழி-2 பிரதேச மலர் இவ்வருடமும் வெளியிடவுள்ளது. எனவே ஊர்காவற்றுறை பிரதேசத்தின் பண்பாட்டுப் பாரம்பரியங்கள், கலை, கலாசார மரபுகள் மற்றும் ஆக்கபூர்வமான விடயங்கள் தாங்கிய கட்டுரைகளை இப்பிரதேச ஆர்வலர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். எனவே மலரை விரைவாக வெளியிடுவதற்கு உதவியாக 2017.02.28 ஆம் திகதிக்கு முன்னதாக ஆக்கங்களை நேரிலோ அல்லது தபால் மூலமோ ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலக மலர் வெளியீட்டுக் குழுவினரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.(இ)

# கோத்தாவின் படையினர் வெளிநாடு செல்லத்தடை

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜப க்ஷவின் இரண்டு பாது காப்பு உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல் லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

29 மில்லியன் ரூபா பணத்தை முறைகே டாக பயன்படுத்தி அரசாங்கத் திற்கு நட்ட த்தை ஏற்படுத்தி யதாக குற்றம் சுமத்தப்பட்டு ள்ளது. இந்த இரண்டு பாதுகாப்பு உத்தி யோகத்தர்களும் வெளி நாட்டு பயணங்களை மேற் கொள்ளக் கூடாது என கொழு ம்பு கோட்டே நீதவான் லங்கா ஜயரட்ன நேற்று முன்தினம் உத் தரவிட்டுள் ளார்.

இராணுவத்தில் கடமை யாற்றி வரும் லக்ஷ்மன் திலகசிறி மற்றும் உபுல் தர்மதாச ஆகியோருக்கு இவ் வாறு நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் 2012 ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை யில் அமெ ரிக்காவின் லொஸ் ஏஞ்சல் நகரில் கொன்சி யூலர் காரியாலயத்தில் கடமையாற்றியுள்ள தாகவும், இவ்வாறு கடமையாற்ற பாதுகாப்பு அமைச்சினதோ அல்லது இராணுவத்தினதோ அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை.

இந்தக் காரியாலயத்தில் கடமையாற்றிய போது 29 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு இந்த விசாரணை களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பகுதி நேர வேலை

தினசரி காலையில் 9 மணி முதல் 11 மணி வரை மாவிட்டபுரத்தை மைய மாகக் கொண்டு, உற்பத்தி பொருள் விநியோகத்தில் ஈடுபடக்கூடிய ஒருவர் தேவை. சொந்த மோட்டார் சைக்கிள் அவசியம்.

தொடர்பு கொள்க:- 077 565 1122

# ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்க வேண்டியது அவசியம்

(கொழும்பு)

ஒரே தேசிய பாடசாலை யில் பத்து ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றும் ஆசிரி யர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

நான்காயிரத்திற்கும் மேற் பட்ட ஆசி ரியர்கள் ஒரே பாட சாலைகளில் பத்து ஆண்டு களுக்கு மேல் கடமையாற்றி வருவ தாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கடமையாற்றி வரும் அனை த்து பாடசாலை ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆசிரியர்களை இடமாற்றம் செய் வதற்கு அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதி பெற்றுக் கொள்வ தில் சிக்கல்கள் காணப்படுவ தாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித் துள்ளார்.

எவ்வாறெனினும் இந்த ஆசிரியர்கள் நிச்சயம் இட மாற்றம் செய்யப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்தோனேசியாவிற்கு ஜனாதிபதி விஜயம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந் தோனேசியாவிற்கு செல்ல வுள்ளார்.

எதிர்வரும் 6 ஆம் திகதி இந்தோனேசியாவிற்கு விஜ யம் செய்யவுள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித் துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் ஈரானுக்கான விஜயமொ ன்றை ஜனாதிபதி மேற்கொ ள்ள விருந்தபோதும் அதிக வேலைப்பளு காரணமாக ஈரானிற்கான விஜயம் இர த்து செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே ஜனா திபதி இந்தோனேசியாவி ற்கு விஜயம் செய்யவுள்ள துடன் மார்ச் மாத பிற்பகு தியில் ரஷ்யாவிற்கும் செல் லவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்து பேச்சுவார் த்தை நடத்தவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

# சிகிரியாவைப் பார்வையிட இணையம் ஊடாக அனுமதி

இலங்கையின் பிரசித்தி பெற்ற சுற்றுலா தளமான சிகி ரியாவை பார்வையிடுவதற் கான அனுமதியை, இணை யத்தளம் ஊடாக வழங்குவ தற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

சிகிரியாவை பார்வையி டுவதற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுகின்ற சிரமம் மற்றும் நெரிசலைத் தடுக்கும் நோக் கில் இணையத்தளத்தில் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

சிகிரியாவிலுள்ள சுற் றுலா பயணிகளுக்கு அனு மதிப்பத்திரம் வழங்கும் மத் திய நிலையத்தில் இந்த வசதி எதிர் வரும் 11ஆம் திகதி கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தலை மையில் ஆரம்பிக்கப்பட வுள்ளது. இணையத்தளம் ஊடாக விண்ணப்பிக்கப்ப டும் அனுமதிப்பத்திரம் 3 மாத ங்களுக்கு செல்லுபடியாகும்.

இதேவேளை, 2700 ஆண் டுகளாக பாதுகாக்கப்படுகின்ற இப்பன்கட்டுவ மெகாலித்திக்கல் லறையில் பூமியில் இந்த நிலை யம் திறக்கப்படவுள்ளது. (இ-7)

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி.பா: 28 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்து பெற்றவர்
தொ.இ: B/6901

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:BSc IT
நியூசிலாந்து PR
தொ.இ: B/6903

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:ஜேர்மனி குடியுரிமை
தொ.இ: B/6906

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L/தனியார தொழில்
தொ.இ: B/6907

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 23 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:MSc/
அவுஸ்திரேலியா குடியுரிமை
தொ.இ: G/6902

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 39 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி/
அரசதொழில்
தொ.இ: G/6904

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:பட்டதாரி
தொ.இ: G/6908

பிறப்பு: 1987RC
உயரம்: 5'4''
தகைமை/தொழில்:MBA, BSc/
பொறியியலாளர்
தொ.இ: G/6910

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

# இராசி பலன்

11.02.2017
(தை 29, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
பூரணை காலை 6.59 மணிவரை
பிரதமை பின்னிரவு 6.22 மணிவரை
ஆயிலியம் காலை 9.51 மணிவரை
சுபநேரம் 3.34-5.04 மணிவரை
இராகுகாலம் 9.34-11.04 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| கேது | கிரகநிலை | | சந் |
| சூரி புத | சந்திராஷ்டமம் உத்தராடம் காலை 9.18 மணிக்கு சிங்-சந் | | ராகு |
| | சனி | குரு | |

**மீனம்:** தேகநலனில் இருந்த பாதிப்புகள் அகலும், சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டுவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மேடம்:** அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முற்படுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிள்ளைகள் குடும்ப பொறுப் புணர்ந்து நடந்துகொள்வர்.

**இடபம்:** வீட்டில் விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**கடகம்:** உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** தொழில் முன்னேற்றகரமாக அமையும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன் வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** தொழிலில் பணியாளர்களை மாற்றும் எண்ணம் உருவாகும், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள்.

# ‘மக்களின் நிலங்களில் இருந்து இராணுவமே வெளியேறு’

# காணி விடுவிப்புக்கு ஆதரவாக

# நேற்று வவுனியாவில் கவனயீர்ப்பு

## வவுனியா ஒன்றிணைந்த சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் முன்னெடுத்தனர்







முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வவுனியா ஒன்றிணைந்த சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் வவுனியா மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு, பிலவுக்குடியிருப்பு மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்துக்கான குடியிருப்புக் காணிகளை விடுவிக்கக்கோரி விமானப்படைத் தளத்திற்கு முன்பாக கடந்த மாதம் 31 ஆம் திகதி முதல் நேற்று பதினொராவது நாளாகவும் தொடர்ந்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.


இந் நிலையில், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிப் பீடத்தில் ஏறிக் கொண்ட மைத்திரி - ரணில் அரசு ஏன் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத்தீர்க்க முடியாமல் உள்ளது.

இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்புக்கள் வாய்திறந்து கேள்வி எழுப்புதல் வேண்டும் என்று தெரிவித்தே இப்போராட்டம் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள பல்வேறு கோசங்களை எழுப்பியவாறும் பதாகைகளை தாங்கியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது “கேப்பாப்பிலவு மக்களுக்கு நீதிவேண்டும், வேண்டும் வேண்டும் காணி நிலம் வேண்டும், மக்களின் நிலங்களிலிருந்து இராணுவமே வெளியேறு, கேப்பாப்பிலவு மக்கள் இலங்கையர் இல்லையா? அரசே! பயங்கரவாதத் தடைச சட்டத்தை உடன் இரத்துச்செய், அரசே! காணாமல் ஆக்கப் பட்டோருக்கு பதில் என்ன? நல்லாட்சி அரசே கேப்பாப் பிலவு மக்களின் நிலத்தைக் கொடு, அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்” போன்ற பல்வேறு வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)




### கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு

# மக்களின் நில மீட்பு போராட்டத்திற்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவு

## சுழற்சி முறையில் போராடவும் முடிவு

(பனிக்கன்குளம்)

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது நிலங்கை விடுவிக்கக்கோரி கேப்பாப்பிலவு மக்களும், புதுக்குடியிருப்பு மக்களும் முல்லைத்தீவில் வெவ்வேறு இடங்களில் ஆரம்பித்துள்ள தொடர் போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட தாய்ச்சங்க பிரதிநிதிகளும், முல்லைத்தீவு மாவட்ட தலைவர், செயலாளர், வலயச் செயலாளர் உள்ளிட்ட அதிபர்கள், ஆசிரியர்களும் நேற்று ஒன்றிணைந்து ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்திற்கு சுழற்சி முறையில் அதிபர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதோடு மக்களின் வாழ்விடங்கள் விடுவிக்கப்படாதவிடத்து ஒட்டுமொத்தமாக அதிபர்கள், ஆசிரியர்களோடு மாணவர்களையும் இணைத்து போராடுவதற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முடிவெடுத்துள்ளது.



போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோரது குழந்தைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக மாற்று ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

இவர்களுடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், கத்தோலிக்க மதத் தலைவர் ஆகியோர் இணைந்து நேற்று போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தனர். (2-281)

# வெடிக்காத நிலையிலிருந்த எறிகணைக் குண்டு மீட்பு

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பொலிஸ அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட ஓமந்தை பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பன்றிக்கெய்த குளம், புதிய வேலர் சின்னக் குளம் கிராமத்தில் வயல் ஒன்றில் வெடிக்காத நிலையிலிருந்த எறிகணை குண்டு ஒன்றை ஓமந்தைப் பொலிஸார் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய மீட்டு பின்னர் அதை பாதுகாப்பான முறையில் செயலிழக்கச் செய்துள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தனது வயல் நிலத்தில் வேலையில் ஈடுபட்டிருந்த விவசாயி ஒருவர் நிலத்தில் புதையுண்ட நிலையில் வெடி குண்டு இருப்பதைக் கண்டு உடனடியாக ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்குத் தகவலை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு சென்ற ஓமந்தைப் பொலிஸார் வவுனியா மாவட்ட நீதிமன்ற அனுமதியுடன் குறித்த குண்டை மீட்டு, செயலிழக்கச் செய்துள்ளனர். (2-15)

# தங்கக் கிடங்கு தோண்டிய ஐவர் விளக்க மறியலில்

வவுனியா மாவட்ட பொலிஸ அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட செட்டிகுளம் பொலிஸ் நிலையப் பிரிவில் விடுதலைப் புலிகளின் தங்கக் கிடங்கு தொடர்பாக ஆராய்ச்சி செய்த ஐந்து பேரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை வேளையில் வவுனியாவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் தம்புத்தேகமவைச் சேர்ந்த 3 வியாபாரிகளும் வவுனியா செட்டிகுளம் பகுதிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தங்க கிடங்கு தொடர்பாக சோதனை செய்துள்ளனர்.

குறித்த நபர்கள் தமது சோதனைகளை முடித்துக் கொண்டு அன்றைய தினமே இரவு நவீன மோட்டார் காரில் திரும்பும் வழியில் வவுனியா இரட்டைக்குளம் பகுதியில் வீதி பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் இடைமறிக்கபபட்டுள்ளனர்.

இதன்போது பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர்களிடம் அதி நவீன ஸ்கானர் கருவி இருப்பதை அவதானித்துள்ளனர்.

பின்னர் குறித்த நபர் களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சந்தேக நபர்கள் விடுதலைப் புலிகளின் தங்கக் கிடங்கை தேடி வந்துள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட ஸ்கானர இலத்திரனியல் கருவி 25 அடி ஆழத்தில் இருக்கும் திடப பொருட்களைக் கூட அடையாளம் காட்டக் கூடியதாகவும் 40 இலட்சம் ரூபா பெறுமதியானதுடன் இந்த ஸ்கானர் இலங்கை தொல் பொருளியல் ஆராச்சி நிலையத்தில் கூட இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (2-15)



விமானப் படையினர் கையகப்படுத்தியுள்ள பொது மக்களின் ஏக்கர் கணக்கிலான காணிகளை விடுவிக்குமாறு கோரி கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் ஆதரவுடன் 11 ஆம் நாளான நேற்றும் தொடர்ந்து நிலமீட்புக்கான பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்திற்கு பல தரப்பினரின் ஆதரவும் வலுத்து வருகின்றது. பந்தல்கள் அமைத்து பகலில் கொளுத்தும் வெயிலிலும் இரவு பனிக்குளிரிலும் சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை தளராத மன உறுதியுடன் நிலமீட்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். தமக்கான காணிகள் எப்பொழுது விடுவிக்கப்படுமோ அன்றே போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்படும் என அம்மக்கள் உறுதியுடன் தெரிவிக்கின்றனர். (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செயலக

## உற்பத்தி திறன் செயற்பாடுகளை முல்லை.செயலகத்தினர் பார்வை

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் களத்தரிசிப்புப் பயணமாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்திறகுச் சென்று அங்குள்ள நிர்வாக நடைமுறைகளை பார்வையிட்டுள்ளதுடன், அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களுடன் நட்புறவாடியுள்ளனர்.

இந்த களத்தரிசிப்புப் பயணம் கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்றுள்ளது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் 50 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட செயலகம் கடந்த 2016, ஆம் ஆண்டு தேசிய ரீதியில் இடம் பெற்ற உற்பத்தி திறன் போட்டியில் முதல் தடவையாக பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது .

இதன் போது அவர்கள் வெற்றியீட்டுவதற்கு மூலகாரணமான உற்பத்தி திறன் செயற்பாடுகளையும் பார்வையிட்டு அன்றைய தினமே மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு திரும்பியுள்ளனர்.

அந்த வகையில் கடந்த 7 ஆம் திகதி அன்று முல்லைத்தீவு அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் 50றகும் மேறபட்ட அலுவலர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வருகைதந்து உற்பத்தி திறன் செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன் அலுவலர்களுடன் அனுபவப் பகிர்வினையும் மேற்கொண்டனர். (2-15-312)

## விவசாயத்திற்கு பயன்படுத்திய விளை நிலங்கள் தமது பகுதிகளாக அடையாளமிட்டு காணி அபகரிப்பு

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி குணசீலன் குற்றச்சாட்டு

(மன்னார்)

மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயம் சார்ந்த விளை நிலங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக காலம்காலமாக பயன்படுத்தி வந்த காணிகளை "வன இலாகாவினால்" தொடர்ச்சியாக தமது பகுதிகளாக அடையாளமிடப்பட்டு காணி அபகரிப்பு இடம்பெற்று வருவதாக வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில்




அவர் மேலும் தெரிவிக்கையில்,

மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயம் சார்ந்த விளை நிலங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக காலம்காலமாக பயன்படுத்தி வந்த காணிகளை "வன இலாகாவினால்" தொடர்ச்சியாக தமது பகுதிகளாக அடையாளமிடப்பட்டு காணி அபகரிப்பு இடம் பெற்று வருவதோடு, மீளவும் அக்காணிகளுக்கு உரிய மக்களை குறித்த காணிகளுக்குள் செல்ல தடை விதித்து புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாகவே குஞ்சுக்குளம் கிராமத்தில் மக்களின் சுமார் 200 ஏக்கர் காணி இவ்வாறு சுவீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் குறித்த காணிகளில் விவசாயம் செய்வதற்கான அனுமதியை அரசாங்கத்திடம் இருந்து உத்தியோகபூர்வமாக 1965 ஆம் ஆண்டில் இருந்து இவற்றை பெற்று வந்திருக்கின்றார்கள்.

இவர்களிடம் குறித்த காணிகளுக்கான அரச அனுமதிப் பத்திரம் மற்றும் காணி உறுதிகளும் காணப்படுகின்றன.

அப்படி இருந்தும் குறித்த காணிகள் வன இலாகாவிற்கு சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டு குறித்த காணிகளுக்கு எல்லைக் கற்கள் போடப்பட்டு மக்கள் உள்ளேசெல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் அரசாங்கத்தினால் அதுவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் அவரினால் நேரடியாக வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் கூட அவர்களின் கையில் இருந்தும் தற்போது குறித்த காணிகள் வன இலாகாவிற்கு சொந்தமானது எனவும் குறித்த காணி அனுமதிப்பத்திரங்கள் செல்லாது என்று தடைகளை விதித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு குறித்த மக்களுக்கு வன இலாகாவின் செயற்பாடுகள் பாரிய தடையாக உள்ளதாக அந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த ஆக்கிரமிப்பு தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட அனைவருக்கும் தெளிவுபடுத்தி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயப்பாட்டில் இருக்கின்றோம்.

மாகாண சபையூடாக குறித்த பிரச்சினை தொடர்பில் முதலமைச்சருக்கும் தெளிவுபடுத்தவுள்ளேன்.

இல்லாதுவிட்டால் மக்கள் போராட்டமாக மாற்றி சாத்வீக போராட்டத்தில் இறங்கி எமது மக்களுக்குரிய குறித்த காணிப் பிரச்சினையை தீர்க்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்படுவோம் என்பது உண்மை என அவர் மேலும் தெரிவித்தார். (2-4-15)

அனுமதிப்பத்திரமின்றியும் விதிமுறைகளை மீறியும்

## ஆற்று மணல் ஏற்றிப் பயணித்த சாரதிகளுக்கு தண்டப்பணம் விதிப்பு

### கட்டாய சமூக சேவைப் பணியில் ஈடுபடுமாறு உத்தரவு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அனுமதிப் பத்திரமின்றியும் மற்றும் அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறியும் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த 5 உழவு இயந்திரங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் ஐந்து பேரையும் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இதன்போது நீதிபதி 5 பேருக்கும் நான்கு இலட்சத்து 20 ரூபா அபராதம் விதித்ததுடன், கட்டாய சமூக சேவைப் பணியில் ஈடுபடுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இந்த சந்தேக நபர்களில் மூன்று பேர் இதற்கு முன்னரும் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட நிலையில் மீளவும் அதே குற்றத்தை செய்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் மொத்தம் மூன்று இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் 20 நாட்கள் சமுதாயம் சார் சீர்திருத்த கட்டளைச்சட்டத்தின் கீழ் சமூக சேவையில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அனுமதிப்பத்திரமின்றி ஆற்று மணலைக் கொண்டு சென்ற மற்றுமொரு உழவு இயந்திர சாரதி குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து 80 ஆயிரம் ரூபா தண்டப் பணம விதிக்கப்பட்டதுடன், மணல் பறிமுதல் செய்யப்பட்டு 14 நாடகள் கட்டாய சமூக சேவையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அனுமதிப் பத்திரமின்றி மற்றுமொரு உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற சாரதி குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் 14, நாட்கள் கட்டாய சமூக பணியில் ஈடுபடுமாறும் கட்டளையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு குறித்த 5, சந்தேக நபர்களுக்கும் நான்கு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. (2-15)

## அடிப்படை வசதிகளின்றி இயங்கிய மசாஜ் நிலையம் மூடப்பட்டது

(மல்லாவி )

வவுனியாமாவட்ட பொலிஸ அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் வவுனியா நகரப் பகுதியின் சந்தை சுற்றுவட்ட வீதியில் இயங்கி வந்த மசாஜ் நிலையம் ஒன்று தற்காலிகமாக வவுனியா நகரசபை செயலாளர் ஆர். தயாபரன் விசேட பணிப்புரைக்கமைய மூடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் பல ஆண்டுகளாக இயங்கிவந்த குறித்த மசாஜ் நிலையத்தை நண்பகல் வேளை திடீரென்று பார்வையிடுவதற்குச் சென்ற வவுனியா நகர சபை செயலாளர் ஆர். தயாபரன் அங்கு அடிப்படை வசதிகள் உட்பட மின்பிறப்பாக்கி, தீ அணைக்கும் கருவிகள் போன்ற அத்தியாவசியமான தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்ததுடன் இதனை தற்காலிகமாக மூடுவதற்கும் பணித்துள்ளார்.

அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் நகர சபை அதிகாரிகளின் உறுதிப்படுத்தலுடன் மீண்டும் திறக்குமாறு அவர் அறிவித்தல் விடுத்துள்ளார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த மசாஜ் நிலையம் மூடப்பட்டுள்ளது. (2-15-250)

## பழைய மாணவர் ஒன்று கூடலும் புதிய நிர்வாகத் தெரிவும்

(சோலைநகரி)

மு/ விசுவமடு மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் விசேட ஒன்றுகூடல் நிகழ்வும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விசுவமடு மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும்.

ஒன்றுகூடல் நிகழ்வில் பல பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதாலும் புதிய நிர்வாகத் தெரிவுகள் நடைபெறவுள்ளதாலும் விசுவமடு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற சகல பழைய மாணவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2-309)


# முதல்வர் யார்? வாக்கெடுப்பு எப்படி?

(சென்னை)

தமிழக சட்டசபையில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வாக்கெடுப்பு நடத்துவது எப்படி? என்று உயர் அதிகாரி தகவல் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் தான் எடுக்கும் முடிவின்படி முதலில் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை அனுமதித்தால், அதற்காக சட்டசபையை கூட்டுவதற்கு ஆளுநர் உத்தரவிடுவார். அந்த சட்டசபை கூட்டத்தில் முதலமைச்சர் எல்லா எம்.எல்.ஏக்களின் ஆதரவு கோரி, உரை நிகழ்த்த அனுமதிக்கப்படுவார். சபாநாயகர் தான் இந்த சபையை நடுநிலையோடு நடத்துவார்.

அவர் ஆற்றிய உரை நிறைவு பெற்றதும், வாக்கெடுப்புக்காக சபாநாயகர் உத்தரவிடுவார். தமிழக சட்டசபை 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு உள்ளது. அதன் படி முதல் பிரிவினர் யாரெல்லாம் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தை ஆதரிக்கிறீர்கள்? என்று கேட்பார். அவரை ஆதரிக்கும் எம்.எல்.ஏக்கள் எல்லாம் அப்போது எழுந்திருக்க வேண்டும். அப்போது அவர்களின் பெயர்களை சட்டசபை செயலாளர் குறித்துக்கொண்டு அதை சத்தமாக படிப்பார். அதன் பிறகு அந்த எம்.எல்.ஏக்கள் உட்கார்ந்து கொள்ள வேண்டும்.



அதன்பிறகு முதலமைச்சருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எம்.எல்.ஏ.க்கள் யார்? என்று சபாநாயகர் கேட்பார். உடனே அந்த பிரிவில் உள்ள எதிர்ப்பு தெரிவிக்கும் எம்.எல்.ஏக்கள் எழுந்து நிற்பார்கள். சட்டசபை செயலாளர் அந்த பெயர்களை குறித்துக்கொண்டு, அதை சத்தமாக படிப்பார். பின்பு அவர்கள் உட்கார்ந்துவிடுவார்கள்.

அதன்பின்னர் நடுநிலை வகிப்பவர்கள் யாரோ, அவர்களை எழுந்து நிற்குமாறு சபாநாயகர் உத்தரவிடுவார். நடுநிலை வகிப்பவர்கள் எழுந்து நிற்பார்கள். அவர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டு வாசிக்கப்படும். அந்த வகையில் அனைத்து பிரிவுகளில் உள்ள எம்.எல்.ஏ.க்களின் வாக்கும் கணக்கிடப்படும்.

பின்பு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு எத்தனை பேர்? எதிர்ப்பு எத்தனை பேர்? என்பது கணக்கிடப்பட்டு அவருடைய பெரும்பான்மை நிரூபிக்கப்பட்டதா? என்பதை சபாநாயகர் அறிவிப்பார்.

ஒருவேளை சசிகலாவை முதலாவதாக அழைத்து பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு கேட்டுக்கொள்ள முடிவு செய்தால் அதற்கு முன்பு, சசிகலாவுக்கு முதலமைச்சராக ஆளுநர் பதவி பிரமாணம் செய்துவைப்பார். அதன்பிறகு பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதற்கு ஆளுநர் அழைப்புவிடுவார். அதனைத் தொடர்ந்து மேற்கண்ட முறையிலே வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இந்த வாக்கெடுப்பில் சபாநாயகர் நடுநிலைதான் வகிக்கவேண்டும். ஆனால் ஒருவேளை ஒரு பிரிவுக்கு ஆதரவு கிடைப்பதற்கு ஒரு எம்.எல்.ஏ. கூடுதலாக தேவையென்றால், அப்போது மட்டும் சபாநாயகர் தனது கையை உயர்த்தி தனது ஆதரவு யாருக்கு? என்பதை வெளிப்படுத்தலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# ஓ.பி.எஸ்.-ஆளுநர்-சசிகலா சந்திப்பு

## தமிழக அரசியலில் உச்சக்கட்ட குழப்பம்



தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சசிகலா ஆகியோர் நேற்று முன்தினம் தனித்தனியாக சந்தித்துப் பேசினர். இதையடுத்து ஜனாதிபதி பிரதமர், உள்துறை அமைச்சருக்கு ஆளுநர் அறிக்கை அனுப்பியுள்ளார். இதனால், தமிழக அரசியலில் உச்சக்கட்ட குழப்ப நிலை நீடிக்கிறது. தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா கடந்த டிசெம்பர் 5ஆம் திகதி மறைந்தார். அன்று இரவே எம்.எல்.ஏக்கள் கூடி, ஒருமனதாக ஓ.பன்னீர்செல்வத்தை முதல்வராக தேர்வு செய்தனர். உடனடியாக முதல்வர், அமைச்சர்கள் பொறுப்பேற்றனர். அதன்பின், அ.தி.மு.க. பொதுச்செயலாளராக ஜெயலலிதாவின் தோழி சசிகலா தேர்வு செய்யப்பட்டு டிசெம்பர் 31ஆம் திகதி பொறுப்பேற்றார்.

இந்நிலையில், கடந்த 5ஆம் திகதி திடீரென கூட்டப்பட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் சட்டப் பேரவை கட்சித் தலைவராக சசிகலா தேர்வு செய்யப்பட்டார். இதற்கான தீர்மானத்தை முதல்வர் ஓ.பன்னீர்செல்வமே முன்மொழிந்து, மற்ற எம்.எல்.ஏக்கள் வழிமொழிந்தனர். இதையடுத்து முதல்வர் பதவியை ஓ.பி.எஸ். இராஜினாமா செய்தார். அவரது இராஜினாமாவை ஏற்றுக் கொண்ட ஆளுநர், புதிய அரசு அமையும் வரை முதல்வர் பொறுப்பில் நீடிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து, முதலவராக சசிகலா பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் மேற கொள்ளப்பட்டன. சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் நடந்தன. ஆனால், கோவையில் இருந்த ஆளுநர் வித்யாசாகர்ராவ், சென்னை வராமல் திடீரென டில்லி சென்றார். இதனால், ஆளுநரைச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரும் சசிகலாவின் முயற்சி தள்ளிப்போனது.

இதற்கிடையே, சொத்துக் குவிப்பு வழக்கில் ஒரு வாரத்தில் தீர்ப்பு வழங்கப்படும் என உச்ச நீதிமன்றம் அறிவித்ததால் மத்திய உள்துறை, சட்ட அமைச்சர்கள், மத்திய அரசின் தலைமை சட்டத்தரணி ஆகியோருடன் ஆளுநர் ஆலோசனை நடத்திவிட்டு, மும்பை சென்றுவிட்டார். ஆளுநர் வருகை தாமதமானதால் சசிகலாவின் பதவியேற்பும் தாமதமானது.

### ஓ.பி.எஸ். அணி

இந்நிலையில், கடந்த 7ஆம் திகதி இரவு ஜெயலலிதாவின் நினைவிடத்தில் திடீரென தியானம் மேற்கொண்ட முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தன்னை கட்டாயப்படுத்தி இராஜினாமா செய்ய வைத்ததாக தெரிவித்தார். இது, தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அ.தி.மு.கவினர் 2 அணிகளாக செயற்படத் தொடங்கினர். 5 எம்.எல்.ஏக்கள், ஒரு எம்.பி.மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகள் பலர் பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த சசிகலா, உடனடியாக எம்.எல்.ஏக்கள் கூட்டத்தைக் கூட்டினார். இதில் பங்கேற்ற எம்.எல்.ஏக்களை சொகுசுப் பேருந்துகளில் ஏற்றிச் சென்று கிழக்கு கடற்கரைசாலை கூவத்தூரில் உள்ள ஒரு தனியார் விடுதியில் தங்க வைத்துள்ளனர். "சட்டப் பேரவையில் பலத்தை நிரூபிப்போம்" என்று பன்னீர்செல்வம் தெரிவித்தார். "நிச்சயமாக தமிழக முதல்வராக பதவியேற்பேன்" என்று சசிகலா கூறினார்.



### ஆளுநருடன் சந்திப்பு

இந்நிலையில், தமிழக பொறுப்பு ஆளுநரான வித்யாசாகர் ராவ் மும்பையில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு சென்னை வந்தார். அவரை மாலை 5 மணிக்கு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்துப் பேசினார். அவருடன் அ.தி.மு.க. அவைத் தலைவர் மதுசூதனன் உள்ளிட்டோர் சென்றனர். இந்த சந்திப்புக்குப் பிறகு பன்னீர் செல்வம் கூறும்போது, "உறுதியாக நல்லது நடக்கும். தர்மம் வெல்லும்" என்றார்.

தன்னை கட்டாயப்படுத்தி இராஜினாமா செய்ய வைத்ததாக புகார் கூறி ஒரு மனுவையும், பெரும்பாலான எம. எல்.ஏக்கள் ஆதரவு இருபதால் தன்னை ஆட்சி அமைக்க அனுமதிக்க கோரும் கடிதத்தையும் ஆளுநரிடம் ஓ.பன்னீர்செல்வம் கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து அ.தி.மு.க.பொதுச்செயலாளர் சசிகலா, இரவு 7.20 மணிக்கு ஆளுநர் மாளிகைக்கு வந்தார். அவருடன் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், எடப்பாடி பழனிசாமி, பி.தங்கமணி, எஸ்.பி. வேலுமணி, டி.ஜெயக்குமார், கே.பி. அன்பழகன், கே.பாண்டியராஜன், அமைப்புச் செயலாளர் கே.ஏ.செங்கோட்டையன் ஆகியோர் வந்திருந்தனர். 7.30 மணிக்கு ஆளுநரை சந்தித்த சசிகலா அவரிடம் சட்டப்பேரவை கட்சித் தலைவராக தான் தேர்வு செய்யப்பட்டதற்கான கடிதம், எம்.எல். ஏக்களின் ஆதரவு கடிதத்தை அளித்து, ஆட்சியமைக்க உரிமை கோரினார்.

ஆளுநரை சந்திப்பதற்கு முன்பாக அண்ணா, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நினைவிடங்களில் மரியாதை செலுத்திய சசிகலா, ஜெயலலிதா நினைவிடத்தில் ஆதரவு எம்.எல்.ஏக்களின் பட்டியலை வைத்து வணங்கினார்.

இருவரின் சந்திப்புக்குப் பிறகு அவர்களின் கோரிக்கைகள் மற்றும் தமிழகத்தின் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து மத்திய அரசுக்கு ஆளுநர் வித்யாசாகர் ராவ் அறிக்கை அனுப்பியதாக தெரிகிறது. ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோருக்கு ஆளுநர் அறிக்கை அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

### உச்சக்கட்ட குழப்ப நிலை

அந்த அறிக்கைகளின் அடிப்படையில் சட்ட நிபுணர்களிடம் விரிவாக ஆலோசனை நடத்தியும், மத்திய உள்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதலை பெற்றும் ஆளுநர் உரிய முடிவுகளை எடுப்பார் எனக் கூறப்படுகிறது.

பரபரப்பு அதிரடி திருப்பங்களால் தமிழக அரசியலில் உச்சக்கட்ட குழப்பம் நீடிக்கிறது. (இ-12)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—106

## அபிவிருத்தியை நோக்கி நிற்கும் நெடுந்தீவு!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இலங்கை திருநாடு ஒரு அழகிய தீவு. பலவகையான உயிரினங்களையும் பல்வகைத்தன்மையையும் கொண்ட ஒரு புண்ணிய பூமி. இந்த அழகிய தீவின் வடபகுதியில் பலவகையான சிறிய தீவுகளும் அமைந்திருக்கின்றன. இத்தகையதொரு அழகிய தேசம் எங்கிருக்கும். ஆனால் கடந்த காலங்களில் ஆண்ட போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோரினால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களும் அதன்பின்னராக நடைபெற்ற ஆட்சிமாற்றங்களும் இன்னும் போர்களும் இந்த அழகிய தீவில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இலங்கைத்திருநாடும் இன்னும் வளம்பெறும்.முழுமையாக அபிவிருத்தியடையும். இந்த அபிவிருத்தியில் அனைவரினதும் பங்களிப்பு அவசியம். யாரோ ஒருவர் ஏதோ செய்கின்றார் என்றில்லாமல் துறைசார் வல்லுநர்கள் அனைவரும் இணைந்த கூட்டு முயற்சியின் அவசியத்தை இங்குணர்கின்றோம்.

நெடுந்தீவு தன்னகத்தே கொண்டிருக்கின்ற வளங்களை ஒருமுகப்படுத்தினால் அதிலுள்ள வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தி அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தையும் தொழில்விருத்தியையும் கவனத்திற்கொண்டு அபிவிருத்திக்கான வரைபினை மேற்கொண்டால் நெடுந்தீவின் வளர்ச்சியின் படிநிலைகளை உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தால் அவர்களுக்கிருக்கின்ற சந்தைவாய்ப்பு பிரச்சினையை தீர்க்கமுடியும்.


நெடுந்தீவில் அதிகளவிலான சேதனப்பொருட்கள் நிறைந்து காணப்படுகின்றன. குறிப்பாக பனை மற்றும் ஏனைய தாவரங்களிலிருந்து விழுந்து மனித பாவனையற்று சேதன பொருட்கள் நிறைந்திருக்கின்றதனை நாம் எமக்கு இயற்கையால் கிடைத்திருக்கும் வாய்ப்பாக மாற்றிக்கொண்டால் அதிலிருந்து சிறந்த சேதன உரத்தை நாம் உருவாக்கிக்கொள்ளலாம். இந்த சேதன உரத்தை தரநிர்ணயத்திற்கேற்ப இன்னும் மெருகேற்றிக்கொண்டால் சமிக்ஞைகள் மக்களிடம் வெளிப்படுத்தப்பட்டது. இன்னும் அவர்களின் விருப்பத்தையும் எதிர்பார்ப்புக்களையும் வெளிப்படுத்தியிருக்கின்றது.

நெடுந்தீவில் பலவகையான மூலிகைத்தாவரங்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றினை முதலாக்கி தொழிற்றுறையாக்கும் திட்டங்கள் வரையப்படுதல் வேண்டும். கற்பூமியாக காணப்படும் இடங்களில் பிள்ளைக் கற்றாழை சிறப்பாக அதிகமாக வளர்ந்து காணப்படுகின்றது. ஆனால் அவற்றை தொழிற்றுறைக்கு பயன்படும் வகையில் திட்டம் வரையப்பட்டு அங்குள்ள மக்களுக்கான வேலைவாய்ப்பையும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டால் நெடுந்தீவு செல்வம் கொழிக்கும் பிரதேச செயலாளரும் பிரதேச செயலகமும் தனது முழுமுயற்சிகளையும் உள்வாங்கி அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவதும் அவர்களுக்கு முறையான திட்டங்கள் கொடுக்கப்பட்டால் நெடுந்தீவினை அபிவிருத்தி செய்வது சாத்தியமாகும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 122

வளங்கள் பல அழிந்தும் அவற்றை வினைத்திறனாக பயன்படுத்தாமலும் அதனால் மக்கள் இடம்பெயர்ந்தும் வாழும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு காலத்தில் விவசாயத்தில் கனைகட்டிய பொன்விளைந்த பூமி வரண்டு உவர்நீராகி பயிர்ச்செய்கையே செய்ய முடியாமல் தவிக்க விடப்பட்டிருக்கின்றது. மக்களுக்கான ஆட்சிகள் மாறியென்ன அங்கு பாரம்பரியமாக வாழ்ந்த மக்கள் வளமாக வாழ வழிசெய்யப்படவில்லையே என்னும் ஆதங்கம் அங்கிருக்கும் எம்மினிய உறவுகள் அனைவருக்குள்ளும் உள்ளார்ந்து இருப்பதனை உணரமுடிந்தது. அந்த மக்களை இடம்பெயர வைத்து பல இடங்களில் பூமியே வெறிச்சோடிக் கிடப்பதையும் தற்போது வாழும் மக்களுக்கான வசதி வாய்ப்புக்களை இன்னமும் அதிகரிந்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தால் நெடுந்தீவு போன்ற பல தீவுகள் உள்ளிட்ட பல கிராமங்கள் தாங்களது அபிவிருத்தியை மேலுயர்த்தி தாமே எதிர்பார்த்த மாற்றத்தினுள் உட்புக முயற்சிசெய்யும். மக்கள் மயப்பட்ட மக்களால் மட்டுமே இத்தகைய அபிவிருத்தியை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அதற்காக வாய்ப்புக்களை நாம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இந்த நிலை அனைத்து பகுதியிலும் உணரப்பட்டால் எமது



ஒவ்வொன்றாக கூட்டிச்செல்லலாம். நெடுந்தீவில் இருக்கின்ற மக்களமைப்புக்களை வினைத்திறனாக செயற்படவைத்தல் முக்கியமானது. மகளிர் அமைப்புக்கள், கிராமிய அபிவிருத்தி அமைப்புக்கள், இன்னும் கமக்கார அமைப்புக்கள் என்பன முழுமையாக இயங்காத நிலை காணப்படுகின்றது. மக்களாகவே மக்களுக்காக என்னும் நிலைக்கு அவர்களை திசைமுகப்படுத்தல் வேண்டும்.இவ்வமைப்புக்கள் மூலம் அவர்களுக்குள் ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு உருவாக்கி அவர்களுக்கு தேவையான தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவது முக்கியமானதாகும். மகளிர் அமைப்புக்களின் மூலம் மகளிருக்கான பயிற்சிகளை முன்னெடுப்பதும் அதன் மூலம் அவர்கள் தங்களது வீடுகளிலிருந்து கொண்டே வருமானமீட்டக்கூடியவர்களாக மாற்றியமைக்கலாம். அவர்களின் மனைகளிலிருந்து உருவாகும் நெடுந்தீவில் செய்கை பண்ணப்படும் பயிர்களுக்கு வேண்டிய உரத்தையும் இன்னும் மீதியானதை யாழ்ப்பாணத்திற்கும் ஏற்றுமதி செய்யலாம். இதற்காக இயந்திரங்களின் உதவியுடனான சேதனக்கழிவை சிறந்த உக்கும் பொருளாக மாற்றுவதற்கு முயற்சிக்கலாம். சிறந்த சேதன கூட்டுரத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை திட்டமிட்டு ஆரம்பிப்பது சிறந்தது. பலவிதமாக சேதனப் பொருட்களுடன் நெடுந்தீவில் அதிகளவில் கிடைக்கும் கால்நடைகளின் சாணம் அதிமுக்கியமாக கழிவுகளை மீள்சுழற்சியில் பயன்படுத்துவதற்கு கவனஞ்செலுத்தலாம். சாணம் அதிகமாக இதற்கு மக்களின் ஒற்றுமையும் அவர்களின் இணைந்த செயற்பாடும் மிகமிக முக்கியமானதாகும். மேலும் மக்களிடையே கூட்டுறவை இன்னும் மேம்படுத்த வேண்டும். இதற்கான பூமியாகும்.

நெடுந்தீவில் வாழுகின்ற மக்களுக்கு தண்ணீர்ப்பிரச்சினை இருப்பதாக அறியப்பட்டது. ஆனால் அங்கே அருக்கின்ற குளம் உவர்நீராக காணப்படுகின்றது. கடலிலிருந்து நீர் உட்புகுவதனால் வெட்டுக்களிக்குளம் உவர்நீராக காணப்படுவதாகவும் நீர்வரண்டு போகும் போது அதிலுள்ள மண் காற்றில் கிளம்பி அருகிலுள்ள பாடசாலை மற்றும் தாவரங்களை மண்துணிக்கைகளால் நிறைத்துவிடுகின்றன. குளத்து மண் வெளிக்கிளம்பாது குளத்தைச் சுற்றி தாவர அரணமைப்பதும் அதற்கான வழிமுறைகளை கண்டறிந்து கடல்நீர் உட்புகாது பாதுகாப்பதும் நெடுந்தீவின் நீர் வளத்தை பேணிப்பாதுகாப்பதும் அதனை மக்கள் பயன்படுத்துவதற்குமாக மாற்றியமைக்கலாம். இங்கு உல்லாச பயணத்துறைக்கான அபிவிருத்திகளையும் முன்னெடுக்க வேண்டும்.

மேலும் மக்கள் விவசாயம் செய்வதற்காக கிழக்கு பகுதியிலிருந்து மண்ணை கொண்டுவந்து மேற்கு பக்கத்திலுள்ள தங்களது காணிகளில் நிறைத்து பயிர்செய்வதனை காண முடிகின்றது. ஆனால் தங்களது பூமி கற்களாக காணப்பட்டாலும் அதில் பலவகையான தாவரங்கள் வளர்ந்திருப்பதனையும் காணலாம். மண்ணின் தன்மை பற்றியும் இந்த கற்பூமியில் பயிர்களை வளர்ப்பதற்கான வழிவகைகளையும் கண்டறிவது நெடுந்தீவு மக்களின் வாழ்வாதாரத்திற்கும் அவர்களின் வாழ்வு சிறப்பதற்கும் வழிவகுக்கும். நெடுந்தீவிலுள்ள யாழ்ப்பாண அரச அதிபரின் எண்ணங்களுக்கு இத்திட்டங்கள் தீட்டப்பட்டால் நெடுந்தீவினை விட்டு சென்ற மக்களும் மீண்டும் தங்கள் பூமிக்கு மீண்டும் திரும்புவர். அதன் மூலம் நெடுந்தீவு வரலாற்றில் அபிவிருத்திக்கான முன்னோடு இடமாக மாறுவதுடன் வடபகுதியில் உள்ள ஏனைய பிரதேசங்களுக்கு முன்னுதாரணமாகவும் அமையும்.

தொழிற்றுறை முன்னெடுக்கப்படும் போது அதற்கு தேவையான போக்குவரத்து வசதிகளும் இன்னும் சந்தைப்படுத்தல் உற்பத்திப்பொருட்களுக்கான மதிப்பேற்றஞ் செய்து நெடுந்தீவின் உற்பத்திகளாக உலக சந்தைக்கு எடுத்துச்செல்லும் போது நிச்சயம் நெடுந்தீவின் மகிமை வெளித்தெரிய வரும். கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான வசதிவாய்ப்புக்களையும் சேர்த்தே பெருக்குதல் வேண்டும். மக்களுக்கான அடிப்படைக்கல்வியை அவசியம் கொடுக்கின்ற அதே நேரத்தில் அவர்களின் வாழ்வாதார பிரச்சினைகளையும் எதிர்கொண்டு அதனை தீர்த்து வைத்தல் வேண்டும். உங்கள் அனைவரதும் கவனம் நெடுந்தீவின் பால் நகர்ந்தால் பேற்கூறிய அனைத்தும் சாத்தியம். வாருங்கள் எங்கள் புனித பூமியில் ஒரு அதிசயத்தை அனைவரும் இணைந்து நடத்திக்காட்டலாம்.

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் சீறிப்பாய்ந்தன காளைகள்







(அலங்காநல்லூர்)

அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நேற்று நடைபெற்றன.காளைகளைஅடகிய வீரர்களுக்கும், பிடிபடாமல் சென்ற காளைகளின் உரிமையாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

தமிழக அரசு அவசர சட்டம் கொண்டு வந்ததன் காரணமாக கடந்த 2 ஆண்டுளாக நடைபெறாமல் இருந்த ஜல்லிக்கட்டு போட்டிகள் இந்தாண்டு நடைபெற்று வருகின்றன.

ஜல்லிக்கட்டின் தொட்டிலாக விளங்கும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நேற்று காலை தொடங்கியது. முன்னதாக ஜல்லிக்கட்டில் பங்கேற்க 980 காளைகள் பதியப்பட்ட அதேவேளை, 1464 மாடுபிடி வீரர்களும் பதிவு செய்திருந்தனர்.

வீரர்களுக்கு நேற்று அதிகாலை முதல் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. இதனை தொடர்ந்து காலை 7. 45 மணியளவில் மதுரை மாவட்ட ஆட்சியர் வீரராகவராவ் முன்னிலையில் வீரர்கள், மாடுகளை துன்புறுத்த மாட்டோம் என உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். 8 மணிக்கு அலங்காநல்லூர் கோட்டை முனியசாமி திடல் முன்பு உள்ள வாடிவாசலில் இருந்து முதலாவதாக கோவில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன.

அப்போது அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் ஆரவாரத்துடன் காளைகளை வரவேற்றனர். கோவில் காளைகளை வீரர்கள் பிடிக்கவில்லை. அதன் பின்னர் அவிழ்த்து விடப்பட்ட காளைகள் ஒன்றன்பின் ஒன்றாக வாடிவாசல் வழியாக சீறிப்பாய்ந்து வந்தன. வீரர்களுக்கும், காளைகளுக்கும் காயம் ஏற்படாத வகையில் ஜல்லிக்கட்டு திடலில் 1 அடி உயரத்துக்கு தென்னை நார்கள் போடப்பட்டு இருந்தன.

அசுரவேகத்தில் துள்ளிக் குதித்து வந்த காளைகளை, காளையர்கள் துரத்தி சென்று திமிலை பிடித்து அடக்கினர். சில காளைகள் களத்தில் வீரர்களாடு நின்று விளையாடின. தன்மேல் பாய்ந்த வீரர்களை காளைகள் பந்தாடின.

குறிப்பிட்ட தூரத்திற்குள் காளைகளை பிடிக்க வேண்டும். கொம்பு, வாலை பிடிக்க கூடாது என விழாக் குழுவினர் வீரர்களுக்கு அறிவுறுத்தியிருந்தனர்.

தில்லாக நின்று காளைகளை அடக்கிய வீரர்களுக்கும், பிடிபடாமல் சென்ற காளைகளின் உரிமையாளர்களுக்கும் ரூ. 1 கோடி மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்பட்டன.

.போட்டியின் போது காயம் அடையும் வீரர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க வாடிவாசல் அருகிலேயே மருத்துவ குழுவினர் மற்றும் 15 அம்புலன்சுகளும் தயார் நிலையில் இருந்தன.

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை பார்க்க மாணவர்கள், முக்கிய பிரமுகர்கள் அமர கலரி வசதிகள் செய்யப்பட்டிருந்தன. தடைப்பட்டிருந்த ஜல்லிக்கட்டு நடைபெற்றதையொட்டி அலங்காநல்லூர் கிராமமே விழாக் கோலம் பூண்டிருந்தது. ஜல்லிக்கட்டை காண மதுரை நகரில் இருந்து சிறப்பு பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (இ-12)

## ஈபிள் டவரை பாதுகாப்பதற்கு கண்ணாடி சுவர் எழுப்ப முடிவு

பயங்கரவாதிகளின் தொடர் அச்சுறுத்தல் காரணமாக ஈபிள் டவரை சுற்றி 8 அடி உயரத்தில் வலிமையான கண்ணாடி சுவர் எழுப்ப இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரான்சின் தனிச்சிறப் புகளில் ஒன்றாக நிமிர்ந்து நிற்கும் ஈபிள் கோபுரத்தை அடுத்த தலைமுறையும் கொண்டாடும் பொருட்டு அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளது.

அதன்படி தற்போது போடப்பட்டிருக்கும் உலோக வேலிகள் அனைத்தையும் அகற்றி விட்டு அங்கு கண்ணாடி சுவர் எழுப்ப திட்டமிட்டுள்ளதாக பாரிஸ் நகர மேயர் அலுவகம் தெரிவித்துள்ளது.

குறித்த அதிரடி திட்டத் திற்காக 20 மில்லியன் யூரோ செலவாகும் என்று வல்லுநர்களால் கணிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி கிடைத்ததும் இந்த ஆண்டு இறுதியில் அதற்கான பணிகளை ஆரம்பிக்கவும் திட்டமிட்டு வருகின்றனர்.

2016ஆம ஆண்டு பாரிஸ் நகரில் நடந்த யூரோ கால்பந்து போட்டிகளின் போது, ஈபிள் கோபுரத்தைச் சுற்றி உலோக வேலிகள்



அமைக்கப்பட்டது. தற்போது திட்டமிட்டுள்ள அந்த கண்ணாடி சுவர் எழுப்புவதால் 3 வகையான நோக்கத்தை பூர்த்தி செய்ய முடியும் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.


ஈபிள் கோபுரத்தை அழகு படுத்துவது, பாதுகாப்பு நடவடிக்கைகளை எளிதாக்குவது மற்றும் பார்வையாளர்கள உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகளை அச்சுறுத்தல்களில் இருந்து காப்பது என மேயர் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். (இ-12)

## சசிகலாவின் உத்தரவுகள் செல்லாது

அ.தி.மு.கவில் சசிகலா முறைப்படி கட்சி உறுப்பினர்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படாததால் பொதுச் செயலாளர் என்ற முறையில் சசிகலாவின் உத்தரவுகள் சட்டப்படி செல்லாது என சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். அ.தி.மு.க. கட்சி விதிகள் குறித்து, சென்னை உயர் நீதிமன்ற சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.சிராஜுதீன் கூறியதாவது, அ.தி.மு.க.வின் கொள்கை மற்றும் சட்ட விதி, 20ன் கீழ், அ.தி.மு.க. பொதுச்செயலரை, தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா, புதுச்சேரி மற்றும் அந்தமான் தீவுகளில் செயற்படும், அ.தி.மு.க வின் அனைத்து பிரிவு உறுப்பினரகளின் வாக்குகள் மூலம் மட்டுமே தெரிவு செய்ய முடியும். அந்த விதிகளில், பொதுச் செயலரை தேர்தல் இன்றி தற்காலிகமாக நியமிக்கும் அம்சம் இல்லை. எனவே, தற்போது பொதுச் செயலராக நியமிக்கப்பட்டுள்ள சசிகலா பிறப்பிக்கும் உத்தரவுகள் சட்டப்படி செல்லாது.

அவர் கட்சியின் உறுப்பினராக இருந்தால் அது மட்டுமே செல்லும். மாறாக, பொதுச் செயலர் அந்தஸ்தில் எந்த முடிவையும் எடுக்க முடியாது. யாரையும் நீக்கவோ, சேர்க்கவோ முடியாது. இதுகுறித்து சட்டரீதியாக அணுகினால் நியமன பொதுச் செயலரின் உத்தரவுகள் செல்லாது என தீர்ப்பு கிடைக்கும் என்று அவர் மேலும் தெரி வித்தார். (இ-12)

## இந்தோனேஷியாவில் பாரிய நிலச்சரிவு 12 பேர் உயிரிழப்பு!



இந்தோனேஷியாவின் பிரபலமான சுற்றுலா தீவான பாலியில் நேற்று முன்தினம் வியாழக்கி ழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இரண்டு சிறுவர்கள் உள்ளிட்ட 12 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி இரவு 11 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலச்சரிவானது கின்டமனி பகுதியின் பல கிராமங்களை வெகுவாக பாதித்துள்ளது. குறித்த பகுதிகளில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்து வந்த மழை காரணமாக இந்த நிலசசரிவு ஏற்பட்டதாக தேசிய பேரழிவு நிறுவன செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு வயதுடைய சிறுதி ஒருத்தியும் ஒரு வயதுடைய ஆண் குழந்தை ஒன்றும் அவர்களுடைய தாயும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் செஞ்சிலுவைச் சங்க தொண்டு நிறுவன ஊழியர்கள், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

உலகளாவிய ரீதியில் காடழிப்பு நடவடிக்கையில் இந்தோனேஷியா வேகமாக ஈடுபட்டு வருகின்ற நிலையில் இத்தகைய காடழிப்பு மற்றும் நகர்ப்புற திட்டமிடல்கள் காரணமாகவே பேரழிவுகள் ஏற்படுவதாக சுழலியலாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.(இ-12)

# எல்லைச் சுவருக்குப் பதிலாக நல்லுறவு பாலம் அமைப்போம்

## ட்ரம்பிற்கு பாப்பரசர் வலியுறுத்து



**(வோஷிங்டன்) சமூகத்தில் எல்லைச்சுவர்களை அமைப்பதை தவிர்த்து மாறாக மக்களிடையே நல்லுறவை வளர்த்துக் கொள்ளும் வகையில் பாலங்களை நிர்மாணித்தல் வேண்டும் என பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.**



அமெரிக்காவிற்கும் மெக்ஸிக்கோவிற்கும் இடையே எல்லைச்சுவர் அமைக்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்த நிலையிலேயே பாப்பரசர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எல்லைச்சுவர் அமைப்பதற்கான நிதியை மெக்ஸிக்கோவும் வழங்க வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தி இருந்தார்.

அதற்கான நிதி வழங்குவதாக எந்தவொரு கிறிஸ்தவரும் ஒப்புக்கொள்ளக் கூடாது. அது சிறந்த கிறிஸ்தவருக்கான சிறப்பு அல்ல.

அனைவருடனும் சமாதானமாக வாழ்வதன் மூலம் குற்றம் புரிந்தவர்களுக்கு மன்னிப்பு வழங்க முடியும்.

குடியேற்றவாசிகளின் வருகையை கட்டுப்படுத்தும் நோக்குடன் எல்லைச் சுவர் அமைக்க முற்படும் ஒருவர் ஒரு சிறந்த கிறிஸ்தவராக இருக்க முடியாது என்றும் பாப்பரசர் குற்றம் சாட்டினார். (இ-12)

## ஆயிரக்கணக்கான விமான சேவைகள் ரத்து பனிப்புயலால் ஸ்தம்பித்த றொரண்டோ

(றொரண்டோ)

பனிப்புயல் காரணமாக கனடா மற்றும் வட அமெரிக்க பயணிகள் கடுமையாக பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை றொரண்டோ மற்றும் அமெரிக்காவில் 2,800 இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப் படுகின்றது.

கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில் கனேடிய விமான நிலையங்களுக்கு ஊடாக பயணிக்கும் 2,840 விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)






## ரக்கா விரைவில் கைப்பற்றப்படும்

### அமெரிக்கா உறுதி

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கோட்டையாக திகழும் ரக்கா நகர் எதிர்வரும் வாரங்களில் முற்றாகக் கைப்பற்றப்படும் என பக்தாத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் அமெரிக்க தலைமையிலான கூட்டணியின் பேச்சாளரும், விமானப்படை கேணலுமான ஜோன் டொரியன் தெரிவித்துள்ளார்.



ரக்கா நகரை கைப்பற்றுவதற்கான உந்துதல் களம் அமைத்து வருகின்றமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வெளிப்புற நடவடிக்கைகளுக்காக எதிரிகளால் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு நகராக ரக்கா விளங்குகிறது.

முதற்கட்டமாக நகரை முழுமையாக தனிமைப்படுத்தி, பின்னர் அதனை கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நகர் எப்போது கைப்பற்றப்படும் என்பதை உறுதியாக குறிப்பிட முடியாது.

எனினும், பல முனைகளிலிருந்தும் தீவிரவாதிகளுக்கு அழுத்தம் கொடுத்து நகர் விரைவில் கைப்பற்றப்படும் என்பதை உறுதியாக தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

## ஏமனில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா. 2பில்லியன் நிவாரண உதவி

(சனா)

ஏமனில் கடந்த இரண்டு ஆண்டுகால போரினால் கடும் பஞ்சத்தை எதிர்கொண்டுள்ள சுமார் 12 மில்லியன் மக்களுக்கு நிவாரணமாக 2.1 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்க ஐ.நா. முன்வந்துள்ளது.

குறித்த 2.1 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு மற்றும் பிற உயிர் காக்கும் நிவாரண உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

உலகளாவிய ரீதியில் பாரிய உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள நாடுகளில் ஏமனும் ஒன்றாகும். இங்கு திகைக்க வைக்கும் அளவில் 7.3 மில்லியன் மக்கள் பஞ்சத்தை எதிர்கொண்டுள்ளதுடன், அடுத்த வேளை உணவு எங்கிருந்து கிடைக்கப் போகின்றது எனத் தெரியாத நிலையில் தமது வாழ்நாளை கழித்து வருவதாக மனிதாபிமானப் பணிகளை ஒருங்கிணைக்கும் ஐ.நா. அலுவலகத்தின் ஒருங்கிணைப்பாளர் ஜெமி மெக்கோல்ட்ரிக் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர், ஏமனில், குழந்தைகளுக்கு உணவை பெற்றுக் கொடுப்பதா அல்லது நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொடுப்பதா என்பது அங்குள்ள பல குடும்பங்களுக்கான பிரச்சினையாகும்.

3.3 மில்லியன் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களும் தீவிர போஷாக்கின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று ஐந்து வயதிற்குட்பட்ட 4 இலட்சத்து 60 ஆயிரம் சிறுவர்களும் கடுமையான ஊட்டச்சத்து பிரச்சினைக்கு முகங் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை, ஏமனிலுள்ள மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேற்பட்ட சுமார் 19 மில்லியன் பேர பாதுகாப்பு தேவையை எதிர்க்கொண்டிருப்பதாக ஐ.நா. மனிதநேய விவகாரங்களுக்கான நெருக்கடி நிவாரண ஒருங்கிணைப்பாளர் ஸ்டீபன ஓபிரையன் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## One china திட்டத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆதரவு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின் முதல் தடவையாக சீனாவின் ஜனாதிபதி ஜின்பிங் உடன் தொலைபேசியில் பேசிய ட்ரம்ப் சீனாவின் One China கொள்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்ற பின் பல நாட்டு தலைவர்களை சந்தித்தும், தொலைபேசியில் உரையாடியும் வந்தார்.

ஆனால் சீனாவின் ஜனாதிபதியிடம் மட்டும் அவர் இதுவரை பேசாமல் இருந்தார்.

தற்போது இரு நாட்டு தலைவர்களும் தொலைபேசியில் உரையாடியுள்ளனர்.

மேலும், ட்ரம்ப் எதிர்ப்பார் என எதிர்பார்க்கப்பட்ட சீனாவை மட்டும் ஆதரித்து, தாய்வானை ஆதரிக்கக் கூடாது எனப்படும் One China கொள்கைக்கு அவர் ஆதரவு அளித்துள்ளார்.

வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், இரு தலைவர்களும் வெகு நேரம் தொலைபேசியில் பேசினார்கள்.

அதில், பல தலைப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. சீன ஜனாதிபதியின் One China விடயமான வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ட்ரம்ப் அதற்கு ஆதரவளித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதற்கு ஜி ஜின்பிங் நன்றி தெரிவித்து கொண்டார் எனவும், இரு நாட்டு தலைவர்களும் ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்து கொள்ள பரஸ்பர அழைப்புகளை மேற்கொண்டார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. (இ-12)

## மரப்பொந்தில் 71 தோட்டாக்கள்



(கொழும்பு)

மெதகிரிய, யுதகனாவ பிரதேசத்தில் மரப்பொந்திலிருந்து 71 தோட்டாக்கள் மற்றும் கைக்குண்டு என்பவற்றை நேற்று முன்தினம் இரவு கைப்பற்றியுள்ளதாக மெதகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

விமான எதிர்ப்பு தோட்டாக்கள், ரி-56 ரக தோட்டாக்கள் 66, எம்.பீ.எம்.ஜீ.ரக தோட்டாக்கள் 5 உள்ளிட்ட பல வெடிபொருட்களை பொலிஸார் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத் தொடர்ந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே, மேற்படி வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

# புதிய அரசியலமைப்பு ஊடாக நாட்டைப் பிரிப்பதற்கு நல்லாட்சி அரசு சூழ்ச்சி

## பதறுகிறார் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

**புதிய அரசியலமைப்புச் சூழ்ச்சியின் ஊடாக நாட்டைப் பிரிப்பதற்கு நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது என முன்னாள் ஜனாதிபதியும் எம்.பியுமான மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

"யுத்தத்தினால், நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு முயற்சித்தனர். அந்த முயற்சியை நான் தடுத்துநிறுத்தி, நாட்டை ஒருமைப்படுத்தினேன். இவ்வாறான நிலையில், அரசியலமைப்பின் சூழ்ச்சியின் ஊடாக, நாட்டை பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அம்முயற்சிக்கு நான் ஒரு போதும் இடமளிக்கமாட்டேன்.

மீகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"அரசியலமைப்பில் திருத்தம் அல்லது புதிய அரசியலமைப்பின் ஊடாக, நாட்டுக்கு பெரும் ஆபத்து ஏற்படப் போகின்றது. அது மட்டுமன்றி, கடன் மற்றும் முதலீடு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளும் போர்வையின் கீழ், வெளிநாட்டவருக்கு நாட்டை காட்டிக்கொடுப்பதற்கான முயற்சியும் இடம்பெறுகின்றது. அதற்கும் ஒருபோதும் நாம் இடமளிக்கக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 'அக்கிராசனம்' சரிந்து விழுந்தது

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில், சபாநாயகரின் ஆசனமான அக்கிராசனம், பின்பக்கமாக சரிந்து விழுந்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது குறித்த விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஒரு சந்தர்ப்பத்தில், ஆனந்த குமாரசிறி எம்.பி, சபைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். அப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான ஶ்ரீநேசன் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

சபைக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்த உறுப்பினருக்கான நேரம் நிறைவடைந்ததும் அடுத்ததாக, ஷெஹான் சேமசிங்க எம்.பி. சபைக்கு தலைமைதாங்குவதற்காக அக்கிராசனத்துக்கு அருகில் வந்திருந்தார்.

இருவரும் ஒருவருக்கு ஒருவர் வழிவிடுவதற்கு முயற்சித்த போதே, அக்கிராசனம் பின்பக்கமாக சரிந்து விழுந்து விட்டது.

உடனடியாக ஓடோடி வந்த, சபை உதவியாளர்கள் ஆசனத்தை நிமிர்த்தி வைத்தனர்.

அதன் பின்னர் ஷெஹான சேமசிங்க, அக்கிராசனத்தில் அமர்ந்து சபைக்கு தலைமை தாங்கி வழிநடத்தினார்.

இதேவேளை, பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை கிளப்பிய, ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் எம்.பியான மகிந்தானந்த அளுத்கமகே, நாடாளுமன்ற வரலாற்றிலே, அக்கிராசனம் சரிந்து விழுந்தமை இதுவே முதல் தடவையாகும்.

அக்கிராசனம் சரிந்தது நல்ல சகுணமல்ல. அரசாங்கத்தின் பயணத்துக்கும் இது நல்லதல்ல என்றார். (இ-7)

## ஜல்லிக்கட்டில் பங்கேற்ற தொண்டமானின் காளைகள்



இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ்நாடு, மதுரை, அலங்காநல்லூரில் நேற்று ஆரம்பமான ஜல்லிக்கட்டு போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது.

இப் போட்டியில், ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானின் 3 காளைகள் பங்கேற்றுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பீட்டா, உச்சநீதிமன்றம், மத்திய அரசு ஆகிய மூன்றும் ஒவ்வொரு வகையில் ஜல்லிக்கட்டு போட்டியை தமிழகத்தில் நடத்தவிடாமல் செய்தன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த ஜல்லிக்கட்டு, மாணவர்களின புரட்சிப் போராட்டத்தின் மூலம சிறப்பாக தொடங்கி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பங்கேற்க 950 காளைகள் பதிவு செய்யப்பட்டு 1400இற்கும் மேற்பட்ட வீரர்கள் அவற்றை அடக்கி வருகின்றனர்.

ஜல்லிக்கட்டில் பங்கேற்க பதிவு செய்யப்பட்டுள்ள காளைகளில் இலங்கை அமைச்சர் செந்தில் தொண்டமானின் 3 காளைகள் இடம்பெற்றுள்ளன. (இ-7)

## நாடு, மக்கள் என்ற ரீதியில் இணைந்து செயற்படுவோம்

### ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

(கொழும்பு)

மாகாண, பிரதேச, மொழி, அரசியல் ரீதியாகப் பிரிந்து நிற்பதை விடுத்து நாடு மக்கள் என்ற ரீதியில் ஒன்று படுமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில், கொட்டகலை சீ.எல்.எப் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டார்.

அங்கு குழுமியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையிலான குழுவினரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் எம்.பியுமான ஆறுமுகம் தொண்டமான், காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான முத்து சிவலிங்கம் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

ஜனாதிபதி அங்கு மேலும் உரையாற்றுகையில்,


"நாடு என்ற வகையில் அனைவருக்கும் சரிசமமான அவிருத்தி வேலைத்திட்டங்களையே நான் மேற்கொள்கின்றேன். தொண்டமான் உள்ளிட்ட காங்கிரஸின் மக்கள் பிரதிநிதிகள் என்னுடன் தொடர்புகொண்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவார்கள்.

வறுமை ஒழிப்பு வருடமாகவே இவ்வருடத்தை நாம முன்னெடுக்கின்றோம். அந்த வகையில், வறுமைக்கு பிரதான காரணங்களில் ஒன்றாக போதைப்பொருள் பாவனை காணப்படுகின்றது. அதை கட்டுப்படுத்த நடவடிக்கை முனெடுத்து வருகின்றேன். எதிர்காலத்திலும் மலையகம் தழுவிய சகல மக்களின் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்துவேன்.

ஆகவே, அரசியல் ரீதியாகவும் மாகாண ரீதியாகவும் இன ரீதியாகவும் பிரிந்து நிற்பதை விடுத்து இலங்கையர் என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அர்ஜூனவின் வெளிநாட்டு விஜயங்களின் போது ஏற்பட்ட நிதிமுறைகேடுகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும்

## சுதந்திரக் கட்சி போர்க்கொடி



இலங்கை மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் ஊடாக முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனின் வெளிநாட்டு விஜயங்களின் போது ஏற்பட்டதாகக் கூறப்படும் நிதிமுறைகேடுகள் தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டும் என இராஜாங்க நிதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன வலியுறுத்தியுள்ளார்.


மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ள விபரங்களுக்கு முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் பதில் கூறியாக வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த அறிக்கையின்படி அர்ஜூன் மகேந்திரன் தனது பதவிக்காலத்தில் ஆறரை கோடி ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் நிதியமைச்சர் என்ற வகையில் தனக்கும் எந்தவித அறிவுறுத்தலையும் வழங்காமல் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார.

முன்னாள் ஆளுநர் மகேந்திரன் குறித்த ஊடக அறிககை



யில் அவரது கையொப்பத்தைக் கூட இட்டிருக்கவில்லை என்றும் இராஜாங்க அமைசசர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 11 தமிழர்களை காணவில்லை

## சந்தேகநபர்களை கைதுசெய்ய உத்தரவு

(கொழும்பு)

**2008 ஆம் ஆண்டில் 11 தமிழர்கள் காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு கொழும்பு கோட்டே நீதவான் லங்கா ஜயரத்ன குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.**

2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8ஆம் திகதிக்கும், செப்டெம்பர் 7ஆம் திகதிக்கும் இடையில், 11 தமிழர்கள் கொழும்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டனர்.

இவர்கள் வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளை வதிவிடமாகக் கொண்டவர்களாவர்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கோட்டே நீதிமன்றத்தில் நடந்த போது, இந்த வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு ஒரு மாத கால அவகாசத்தையும் நீதவான் வழங்கியுள்ளார்.

இந்த வழக்கில் இலங்கைக் கடற்படை புலனாய்வுப் பிரிவிலிருந்த லெப்.கொமாண்டர் நிலந்த சம்பத் முனசிங்க சந்தேக நபர்களில் ஒருவராக பெயரிடப்பட்டுள்ளார்.

மேலும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவு கைது செய்யவுள்ளது. இதற்கே கோட்டே நீதவான் அனுமதி அளித்துள்ளார்.(இ-7)

## மாகாண சபைகளுக்கு பொருளாதார திட்டங்களை முன்னெடுக்க அதிகாரம்



(கொழும்பு)

13 ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாணசபைகளுக்கு பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பில் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திவிநெகும சட்டத்தின் ஊடாக இவை முன்னைய அரசாங்கத்தினால் பறிக்கப்பட்டன.

திவிநெகும திருத்தச் சட்ட மூலம் தேசிய ஔடத ஒழுங்குறுத்தல் அதிகார சபைச் சட்டம் ஆகியவற்றின் கீழான இரண்டு ஏற்பாடுகளை நேற்று முன்தினம் பாராளுமன்றம் அங்கீகரித்தது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாரா்ளும ன்ற உறுப்பினரான ஜயம்பதி விக்ரமரட்ன இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும், மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்குவது குறித்தும் தற்பொழுது கலந்துரையாடப்படுகின்றன.

ஆனால், கடந்த ஆட்சியின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பிரயோகித்து மாகாண சபைகள் பலவீனப்படுத்தப்பட்டன என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

நாட்டின் நலனுக்காக அரசாங்கத்தின் க்ரத்தை பலப்படுத்துகின்றோம் என்று தெரிவித்து எதிரணியிலிருந்து உறுப்பினர்களை முன்னைய ஆட்சியாளர்கள் தம்முடன் இணைத்துக் கொண்டனர். அதன் ஊடாக மாகாண சபைகளின் அதிகாரங்களையே அரசாங்கத்தின் கீழ் கொண்டுவந்தனர்.

வாழ் வின் எழுச்சி சட்ட மூலத்தின் ஊடாக பறிக்கப்பட்ட மாகாணசபைகளின் அதிகாரங்கள் மீள வழங்கப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினரான ஜயம்பதி விக்ரமரட்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

## எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பாக பாராளுமன்றில் ஒத்திவைப்பு பிரேரணை



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தேவைக்கு அமைவாகவே உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதென அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

இந்த எல்லை நிர்ணய அறிக்கை குளிரூட்டிய அறைகளில் அப்போது வரையப்பட்டதால் சமகால அரசாங்கம் மக்கள் கருத்துக்களுக்கு செவிமடுக்க நேர்ந்ததென்றும் அமைச்சர் தெரி வித்தார்.

பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் அவர் உரையாற்றினார்.

இந்தப் பிரேரணையை பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். உள்ளூராட்சி தேர்தலை பிற்போட்டதன் மூலம் நாட்டின் அரசியல் கலாசாரத்திற்கு பெரும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

முன்னைய அறிக்கையின் தவறுகளை திருத்துவது அரசாங்கத்தின் நோக்கம். அரசு ஜனநாயகத்தை முடக்கமாட்டாதென அமைச்சர் தெரிவித்தார். 2020 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும் என்றும் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### வீடு மாறுகிறவர்களுக்குச் சில யோசனைகள்

*அவுங்களா? அவுங்க வீட்டைக் காலிபண்ணி ஒரு வருஷம் ஆச்சே!*

*அட்ரஸா? தெரியாதுங்களே!*

இப்படிப்பட்ட பதில்களை உங்களுக்கு வேண்டியவர்கள் பெறத்தான் வேண்டுமா? பொறுப்பற்ற தன்மையின் உச்சம் எவரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டைக் காலி செய்வது.

வீட்டைக் காலி செய்கிறவர்கள் முடிந்தவரை வீட்டுக்காரருடன் சுமுகமாகப் பிரிய முயற்சி செய்ய வேண்டும். அப்படி இருந்தால் தான் நம்மைத்தேடி வருபவர்களிடம் அந்த வீட்டுக்காரர் முகத்திலடித்தாற் போல் பேசாமல் இருப்பார். நம் செயலுக்காக மற்றவர்கள் அவமானப்படலாமா? இது என்ன நியாயம்?

இது போக நாம் காலி செய்து விட்ட போர்ஷனில் குடியிருப்பவர்களை ஒரு முறை அவசியம் சென்று பார்க்க வேண்டும். வெளியூருக்கு மாற்றம் ஆகிவிட்டால் கூடச் சரி, மற்ற வேலைகளையும் வைத்துக் கொண்டு ஒரு பயணம் மேற்கொண்டு நம்முடைய முன்னாள் போர்ஷனில் சௌகரிய அசௌகரியங்களை அக்கறைத் தொனியுடன் இப்போது குடிவந்தவர்களிடம் எடுத்து சொல்ல வேண்டும். (உதாரணம்: இந்த இடத்தில் டி.வி.யை வைக்காதீங்க, மழை நேரத்தில் ஒழுகும்), கையில் சில பழங்களைக் கொண்டு செல்வது நல்லது.

இறுதியாய்ப் புறப்படும் போது, நம்முடைய புது விலாசங்கள் அடங்கிய 25 சீட்டுகளைக் கையில் கொடுத்து (சௌகரியப்பட்டால் விசிட்டிங்கார்டு) எங்களைத் தேடி யாராவது வந்தால் தயவு செய்து இவற்றுள் ஒன்றைக் கொடுங்கள் என்று பணிவாகக் கேட்டுக் கொள்ள வேண்டும். நீங்கள் ஒருமுறை எங்கள் இல்லத்திற்கு வர வேண்டும் என்ற உண்மையில் அழைக்க வேண்டும். இவற்றைச் செய்து விட்டீர்களானால் நம்மைத் தேடிப் பழைய இடத்திற்குப் போகிறவர்களுக்குப் பொறுப்பான பதில் மட்டுமல்ல ராஜ மரியாதையே கிடைக்கும்.

யார் வீட்டை, விற்றாலும் சரி மாற்றினாலும் சரி உடனே புதிய விலாசத்தை அச்சிட்டுச் சொந்த பந்த நட்புக்கு ஒருவர் விடாமல் அனுப்பிவிட வேண்டும். அச்சிட வசதியற்றவர்கள் அல்லது மலைப்பவர்கள் கார்டிலாவது எழுதிப் போடலாம். தினமும் ஐந்து கார்டு என்று அவ்வப்போது செய்யலாம்.

மேலும் ஒன்றும் உள்ளது.

உள்ளூர்த் தபால் நிலையத் தலைமை அதிகாரிக்கு விலாச மாற்றத்தைக் தெரிவித்துப் புது விலாசத்திற்குக் கடிதம் வரச் செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் செய்யாமல் விட்டு விட்டு ஏதோ செய்யக்கூடாத தவறைச் செய்து விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டு ஊருக்கு இரவோடு இரவாக ஓடும் குடும்பங்களின் செயலைப் போல நாமும் நடந்து கொள்ளக்கூடாது.

**லேனா தமிழ்வாணன்**

# புதிய அரசியலமைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு

(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பது முதலாவது கடமையாகும். அதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது இரண்டாவது கடமையாகும் என்று நாடாளுமன்றில் வைத்து அரசாங்கம் நேற்று முன்தினம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவேன். தேவையென்றால், 13 பிளஸை வழங்குவேன் என்றும் தெரிவித்திருந்தார். எம்மை பொறுத்த வரையில், 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படும். அதற்கு மேல் ஒன்றுமே இல்லை என்றும் அறிவித்தது.

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் 10:30 க்கு கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பியுமான விமல் வீரவனச ஒழுங்குப் பிரச்சினையை கிளப்பினார். வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, வெளிநாட்டு ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை சந்தித்துள்ளார். அந்த சந்திப்பின்போது, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும், அது சர்வஜன வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஆகியவற்றின் ஆதரவுடன் நிறைவேற்றப்படும், அதற்கான பொது தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். இதுதானா, அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று வினவினார்.

இக்கேள்விக்கு பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, அதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும். முதலாவதாக புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படும். இரண்டாவதாக அதன்மீது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தபபடும். இவ்விரண்டு விடயங்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணங்கியுள்ளன.

இது இன்றைய (9 ஆம் திகதி வியாழக்கிழமை) நிலைப்பாடாகும் என்றார்.

இதன்போது, குறுக்கிட்ட விமல் வீரவன்ச எம்.பி,

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில், நியமிக்கப்பட்டிருந்த ஆறு வழி நடத்தல் குழுக்களின் அறிக்கைகள் மீதான விவாதம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அவ் விவாதமும் ஒத்தி வைக்கப்பட்டது. அரசியலமைப்பில் திருத்தம் அல்லது புதிய அரசியலமைப்பு தொடர்பில் நாடாளுமன்றத்திலேயே பேச வேண்டும். அப்படியொன்றும் இடம்பெறவில்லையே என்று வினவினார். அதற்கு பதிலளித்த சபைமுதல்வர், அரசியலமைப்பு திருத்தத்துக்கான யோசனைகளை கையளிக்குமாறு சகல கட்சிகளிடமும் கோரப்பட்டது. சில கட்சிகள் கொடுத்துள்ளன. இன்னும்சில கட்சிகள் கொடுக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷதான், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் போதாது என்றார். 13 பிளஸை தருவதாகவும் அவரே கூறியிருந்தார் என்றார். மீண்டும் குறுக்கிட்ட விமல் எம்.பி, சமஷ்டி முறையிலான தீர்வின் ஊடாக, புலிகளுக்கு தேவையானதை நீங்கள் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிக்கின்றீர்கள்.

நாங்கள் அப்படி யோசிக்கவில்லை. நாடாளுமன்றத்தையும் மாகாண சபைகளையும் இணைத்து ஒரு சபையை உருவாக்குவதற்கே நடவடிக்கை எடுத்திருந்தோம் என்றார். எம்மை பொறுத்தவரையில், 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில்தான் எதுவுமே நடக்கும். அதற்கு அப்பால் ஒன்றுமே இல்லையென, சபைமுதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியமர்ந்தார். (இ-7)

# நல்லாட்சி அரசாங்கத்திற்கு காலம் நெருங்கி விட்டது

## மகிந்த அணி கொக்கரிப்பு

(கொழும்பு)

நாடு தற்போது, தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்துக்கான தெற்காசிய நிறுவகம் (சைற்றம்) தொடர்பில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது.

இந்நிலையில், நல்லாட்சி அரசாங்கம் அதற்கான தீர்வினை விரைவாக எடுக்க முன்வரவேண்டும். அரசாங்கம் வெளியேறும் காலம் நெருங்கிக்கொண்டு இருப்பதனை நாம் காணக் கூடியதாக உள்ளது" என, ஒன்றிணைந்த எதிரணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொரளையில் அமைந்துள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் உரையாற்றிய அவர்,

"நாட்டை பாதுகாக்கும்பொருட்டு, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், இலங்கை மருத்துவ சபை என்பன சைற்றம் தொடர்பில் ஆராய்ந்து அதனை நீக்குவதற்கான காரணங்களைச் சுட்டிக்காட்டி, ஆவணம் ஒன்றினை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு அனுப்பி வைத்துள்ளன.

இவ்வாறு நாடு முழுவதும் சைற்றம் தொடர்பில்,



பல்வேறு கிளர்ச்சிகள் எழுந்த வண்ணம் உள்ளன. ஆனால அரசாங்கம், அதற்கான தீர்வினை வழங்காமல், தங்களுக்குள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அனைவரும் ஏற்கும் தீர்வை வழங்குவேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மாலபேயிலுள்ள தொழிலநுட்பம் மற்றும் மருத்துவத்துக்கான தெற்காசிய நிறுவகம் (சைற்றம்) தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி, அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றை வழங்கவுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

"இதேவேளை, சைற்றம் நிறுவனத்தால் வைத்திய பீட மாணவர்கள் எவருக்கும் அநீதி இழைக்கப்பட இடமளிக்கப்பட மாட்டாது" எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அக்கரபத்தனை-ஊட்டுவள்ளி பெங்கட்டன் பிரிவில், நேற்று முன்தினம் இடம்பெற்ற வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"மாலபே சைற்றம் தனியார் மருத்துவ கல்லூரி காரணமாக பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களுக்கு அநீதி ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது. ஜனாதிபதி என்ற வகையில் தான் எந்தவொரு தரப்புக்கும் சார்பாக இந்த பிரச்சினையில் இருக்கப் போவதில்லை.

இவ்விடயத்தில் பக்கச் சார்பின்றி, நடுநிலையாக



செயறபட்டு நியாயத்தை நிறைவேற்றுவேன். இவ்விடயத்துடன் தொடர்புடைய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான திட்டமொன்றை முன்வைத்து, பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன்.

ஆகையால், வகுப்பு புறக்கணிப்புக்களில் ஈடுபடாமல் கல்விச் செயற்பாடுகளை தொடருமாறு அனைத்து மருத்துவ பீட மாணவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 'வாயை மூடு முட்டாள்'

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பினருக்கும் எதிர் தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற கருத்து மோதல்களின் போது, சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, ஒன்றிணைந்த எதிரணியைப் பார்த்து 'வாயை மூடு முட்டாள்' என்று கூறிவிட்டார்.

நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் 10:30க்கு கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர், எழுந்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் எம்.பியான, தினேஷ் குணவர்த்தன, நிதி அமைச்சின் கட்டளைச் சட்டங்களின் கீழான கட்டளைகளை அங்கீகரிப்பதற்கான மூன்று பிரேரணைகள் மீதான விவாதம், நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த மூன்று பிரேரணைகளுக்கும் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

எனினும், அந்தத் திருத்தங்களில் ஒரேயொரு பிரேரணைக்கான திருத்தம் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனைய திருத்தங்களை அரசாங்கம் மறைத்துவிட்டது என்று சுட்டிக்காட்டினார். இதன்போது எழுந்த சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, அது வேண்டுமென்றே விடப்பட்டது அல்ல.

சிறு தவறு ஏற்பட்டு விட்டது. அவற்றை திருத்துவதற்கு நீண்டநாட்கள் தேவையில்லை. உடனடியாக திருத்தலாம் என்றார்.

எனினும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர், சபை முதல்வரின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோஷமிட்டனர்.

சற்று பதற்றமடைந்த சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல, "வாயை மூடு முட்டாள்" என்று, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை பார்த்து கூறிவிட்டார். இதனால், சபையில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது. இதனை யடுத்து, சபையமர்வை 10 நமிடங்களுக்கு ஒத்திவைதத சபாநாயகர், கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூடிய, பிரேரணைகளின் மீதான திருத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

முற்பகல் 11.10 மணியளவில் சபை மீண்டும் கூடியதுடன், வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரம் ஆரம்பிக்கப்பட்டது. வினாக்களுக்கான நேரம் நிறைவடைந்ததன் பின்னர், கருத்துரைத்த சபாநாயகர் கரு ஜயசூரிய, திருத்தங்கள் உள்ளடக்கப்படவில்லை என்ற விவகாரம், கடந்த புதன்கிழமை இரவே எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இது போன்ற சம்பவம் இடம்பெறுவது இது முதல்தடவையல்ல.

இதற்கு முன்னரும், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டி தவறுக்கு மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். (இ-7)

# மகிந்த அரசாங்கம் யுத்தத்தால் பறித்ததை மைத்திரி அரசாங்கம் சட்டத்தால் பறிக்கிறது

## அமைச்சர் ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் அரசியல் அதிகாரங்களைப் பறிப்பதில் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இருந்த கடந்த அரசாங்கத்து க்கும் மைத்திரிபால சிறிசேனவின் தலைமை யில் இப்போதுள்ள நல்லாட்சி அரசாங்கத்துக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. கடந்த கால அரசாங்கம் யுத்தத்தால் பறித்ததை நடப்பு அரசாங்கம் சட்டத்தால் பறிக்க முயல்கிறது என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இரணைமடு பாரிய நீர்ப் பாசனத்திட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் புதிய கட்டடத் திறப்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திக்கு அருகில் 12 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்த அரசாங்கத்தின் பெயரில் நல்லாட்சி என்ற சொல் ஒட்டிக் கொண்டிருப்பதால், பெரும்பாலானவர்கள் இந்த அரசாங்கம் நல்லதையே செய்யும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். உண்மைநிலை அவ்வாறு இல்லை. கடந்த அரசாங்கம் துப்பாக்கி வேட்டுகள் முழங்க முழங்க எல்லாவற்றையும் செய்தது. அதனால், அந்த அரசாங்கம் எங்களுக்குப் பாதகமாகச் செயற்படுகிறது என்று நாங்கள் யாருக்கும் விளக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனால், இந்த அரசாங்கம் சத்தமில்லாமல், மிகவும் நாசூக்காகச் சட்டங்களின் மூலம் எங்களிடம் இருக்கும் எல்லாவற்றையும் பறிக்க எத்தனிக்கிறது.



நாங்கள் இராணுவத்துக்காக நிலங்களைப் பறிக்க வேண்டாம் என்று போராடுகின்றோம். ஆனால், அரசாங்கம் இப்போது இரணைமடுக் குளத்துக்கு அருகாமையில் 300 ஏக்கர் காணியைத் தாவரவியல் பூங்கா அமைப்பதற்குத் தருமாறு கோருகிறது. இது ஒரு வகையில் மறைமுகமாக முன்னெடுக்கப்படும் நிலப்பறிப்பு. தாவரவியல் பூங்கா வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. நிலங்களை அபகரிக்காமல் பூங்கா அமைத்து நிர்வகிக்கும் பொறுப்பை மாகாண சபையிடம் தாருங்கள் என்றுதான் கேட்கிறோம். ஆனால்,தமிழ்மக்களுக்கு மாகாண சபைகளினூடாக வழங்கப்பட்ட அற்ப சொற்ப அதிகாரங்களைக் கூட விட்டுவைக்க நல்லாட்சி அரசாங்கம் தயாராக இல்லை.

பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து உள்ளூராட்சி சபைகளுக்கு இருந்த கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவது உட்படப் பல அதிகாரங்களை நகர அபிவிருத்தி அதிகாரசபை தன்வசம் எடுத்துக் கொண்டுள்ளது. புதிய அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்கும் என்று ஒரு புறம் சொல்லிக் கொண்டு, இன்னொரு புறம் அவசர அவசரமாக மாகாணங்களின் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ள மிகக் குறைந்த அதிகாரங்களையும் இரகசியமான முறையில் பறித்து வருகிறது. இது தொடர்பாக நாம் விழிப்பாக இல்லாவிட்டால் அரசியல் ரீதியாகத் தமிழ்மக்கள் மிகப்பெரும் தோல்வியைச் சந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார். (2)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | விநாயகர் திருவடியில் |
|---|---|
| 20.11.1985 | 25.01.2016 |

**அமரர் சு.நிரூஜன்**
**(ஸ்ரீலங்கா ரெலிகொம், வவுனியா)**

திதி: தை மாதம் கிருஷ்ணபட்ச பிரதமை

புன்னகை ததும்பும் உன் முகம் கண்டு ஓராண்டு கடந்து
விட்டதே எம் அன்பு நிரூஜா!
அன்புள்ளம் கொண்டு அரவணைத்து உதவிக்கரம்
தந்து உதிரமும் தானமாய்த் தந்த மாதவப் புதல்வா
எம்மையெல்லாம் வாழ வைப்பாயென
நாமெண்ணியிருக்க, நெஞ்சமதை பதைக்க வைத்தே
வஞ்சகக் காலனவன் வானுலகழைத்தானே!
வேழமுகத்து விநாயகர் மேல் ஆழ மனம் பதித்த
அன்புச் செல்வமே
நாளும் உன்னை நினைத்திருப்போம் நீயமர்ந்த

151, நாவலர் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 983

Search for people, places and things — Nagendram Home

ராதை




துளசி




நிலு




விமல்





விஜி




விஜ்ஜக்சன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



சாவகச்சேரி மண்டுவில் செல்வவிநாயகர் சனசமூக நிலைய புதிய கட்டடத்திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மண்டுவில் கிராமசேவை உத்தியோகத்தர் பொ. லோகேந்திரன் தம்பதிகள் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.கவிதா வழங்கி வைப்பதையும் நிலையத்திற்கான நிதியை கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- விஜயவாசன்)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் பாரதி இல்ல சிறார்களுக்கு 42,000 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.



இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 67வது ஆண்டு விழா கடந்த ஆண்டு யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ, மாணவிகளையும் 2017ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளையும் விருந்தினர்கள் கௌரவித்து பரிசில்கள் வழங்குவதை படங்களில் காணலாம்.



ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தின் கூட்டுறவாளர் தினவிழா அண்மையில் முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ,வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கூட்டுறவுத்துறையில் சேவையாற்றிய கூட்டுறவுப் பெரியார்கள், உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான துவிச்சக்கரவண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன.



வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியூடாக கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கதிரைகள் அண்மையில் அல்லைப்பிட்டி வெண்புரவி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், வரணி கரம்பைக்குறிஞ்சி கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் கைதடி நவபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதை படங்களில் காணலாம்.

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும்



# கம்பன் விழா 2017

(கொழும்பு) 11.02.2017 ( சனிக்கிழமை)

மூன்றாம் நாள்

தனியுரை

பேராசிரியர் வி.அசோக்குமாரன்

பொருள்:

"கம்பனும் இளங்கோவும் "

விவாத அரங்கு

தலைவர் எஸ். ராஜா

பொருள்:

"எண்ணத்துள் இடம்பிடிக்கும் எந்திழை எவள்?"

*அறப்பெண் திரிசடையே!- கு.புரந்தரன்*

*அன்புப் பெண் சுமித்திரையே!- கு.அசோக்பரன்*

*அரசியற் பெண் கைகேயியே!- ச.லலீசன்*

*அருந்தவப் பெண் சபரியே!- அ.வாசுதேவா*

*அபலைப் பெண் அகலிகையே!- சி.கேசவன்*

*அறிவுப்பெண் தாரையே!- த.நாகேஸ்வரன்*

காலை 9.30 மணி

மங்களவிளக்கேற்றல்

திரு.எஸ்.சிவகுமார் தம்பதியர் (அதிபர், யூ.கே.ஈ.)

கடவுள் வாழ்த்து

திரு.ரி.கருணாகரன்

தலைமையுரை

திருமதி. வசந்தா வைத்தியநாதன்

தொடக்கவுரை

திரு.ஏ.பி.ஜெயராசா (அதிபர், வெள்ளவத்தை, நித்திய கல்யாணி ஜுவலரி)

அஞ்சலி அரங்கு

உரையரங்கு

பொருள்:

"கம்பன் இசைத்த கவியெல்லாம் நான் "

பங்குபெறுவோர்

எஸ்.ராஜா –பாரதி பாஸ்கர்

மேன்முறையீட்டு பட்டிமன்றம்

முதல் நாள் பட்டிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு

நடுவர்

பேராசிரியர் சாலமன் பாப்பையா

பதிவாளர் அறிக்கை – லோ. துஷிகரன்

நோக்கரால் பாதிக்கப்பட்ட அணிவாதம் – வி.அசோக்குமாரன்

நோக்கர் அணி சார்பாக எதிர்வாதம்– ஜி.இராஜகுலேந்திரா

நடுவர் தீர்ப்பால் பாதிக்கப்பட்ட அணிவாதம் – இ.ஜெயராஜ்

வென்ற அணி சார்பாக எதிர்வாதம் – தா.கு. சுப்பிரமணியம்

மாலை 5.30 மணி

மங்கள விளக்கேற்றல்

திரு.எஸ். வி.எம். குணரட்ணம் தம்பதியர் (அதிபர், எஸ்.வி.எம். நிறுவனம்)

கடவுள் வாழ்த்து

திரு. சி.சிவமைந்தன்

தலைமையுரை

மாண்புமிகு மனோ கணேசன் (அமைச்சர், தேசிய சுகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு)

தொடக்கவுரை

கௌரவ.வி.பி. சிவக்கொழுந்து (துணை சபாநாயகர் , புதுச்சேரி சட்டசபை)

கொழும்பு கம்பன் கழகம்


# இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் 2016/2017 கல்வியாண்டிற்கான பயில் நெறிகளுக்கான அனுமதிப்படிவம் பூர்த்தி செய்யப்படும்போது கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான விடயங்கள்

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் சரியான முறையில் நிரப்பப்படும் போதுதான் ஒவ்வொரு மாணவரும் தனது Z புள்ளிக்கு ஏற்றவாறான துறைகளில், பல்கலைக்கழகங்களில் கற்பதற்கான அனுமதியினைப் பெறறுக் கொள்ளலாம். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 22 பல்கலைக்கழகங்கள் /நிறுவனாங்களில் அனுமதி வழங்கப்படுகின்றது. பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவினால் வேண்டப்பட்ட நிபந்தனைக்கு அமைவாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். கடந்த காலங்களில் நிபந்தனைகளைக் கருத்திற் கொள்ளாது விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்த மாணவர்கள் சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**அனுமதி எண்ணிக்கை நிர்ணயம்**

1)தேசிய ரீதியில் Zபுள்ளி நிரலின் அடிப்படையில் 40%.

2)மாவட்டத் திறமையின் அடிப்படையில் 55% (சனத்தொகை விகிதாசார அடிப்படையில்)

3) 16 பின்தங்கிய மாவட்டங்களுக்கு சனத்தொகை விகிதாசாரப் படி 5%.

**அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்**

1)மூன்று தடவைக்குள் பரீட்சைக்குத் தோற்றி மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2)பொதுச்சாதாரண வினாத்தாளில் 30% இற்கு குறையாதபுள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்ட நிர்ணயம**

பரீட்சை நடந்த திகதியிலிருந்து மூன்று வருடங்கள் குறிப்பிட்ட பாடசாலையில் கற்றிருத்தல் வேண்டும். பலபாட சாலைகளில் கற்றிருப்பின் அதிககாலம் படித்த பாடசாலை அமைந்துள்ள மாவட்டமே கருத்தில் கொள்ளப்படும்.

**அனுமதிக்கான முக்கிய துறைகள்**

மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய பாடங்களின் அடிப்படையில் இத்துறைகளின் தெரிவு அமைந்திருக்கும். இத்துறை கள் தொடர்பாக கற்கை நெறி பல்கலைககழகம் UniCode 119 ஆவது பக்கத்திலிருந்து 123ஆம் பக்கம் வரை கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையினரும் தமக்குப் பொருத்தமான துறைகளை தெரிவு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

1)கலைப்பிரிவு

2)வணிகவியல் பிரிவு

3)உயிரியல் விஞ்ஞானப் பிரிவு

4)பௌதீக விஞ்ஞானப் பிரிவு

5) பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு

6)உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு

**விண்ணப்பிக்கும் போது கருத்திற்கொள்ளவேண்டிய மிக முக்கியமான விடயங்கள**

1)விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படும்போது இது தொடர்பான அனுபவம் உள்ளவர்களின் அனுமதியைப் பெற்று பூர்த்தி செய்யப்பட வேண்டும.

2)கைநூல் முழுமையாக வாசிக்கப்படவேண்டும்.

3)கூடுதலானதுறைகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கவேண்டும்.

4)விசேட தகைமைகள் அடிப்படையில் விண்ணப்பிக்கும் போது வேண்டப்பட்ட விசேட தகைமைகள் (O/L கணிதம், ஆங்கிலம்) உறுதிப்படுத்தி அனுப்பப்படவேண்டும்.

5)குறிப்பிட்ட இறுதி விண்ணப்பத் திகதிக்கு முன்னரான விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

6) அனுப்பப்படுகின்ற ஆவணங்களின் போட்டோப் பிரதியினை ஆவணப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

7)பெயர்கள் பிறப்புச் சான்றிதழ், பரீட்சைமுடிவுகளில் உள்ளபெயர்களில் வேறுபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் சமாதான நீதவானினால் இரு பெயர்களும் ஒன்று என்பதனை உறுதிப்படுத்தி சத்தியக் கடதாசி முடித்து அனுப்பப்படவேண்டும்.

8)இவ்வருடம் இணையத்தளத்தினூடாக (Online) பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டும்.

| Uni Codes | | | |
|---|---|---|---|
| 0 | 1 | 6 | C |
| 0 | 1 | 6 | A |
| 0 | 1 | 6 | B |
| 0 | 1 | 6 | E |
| 0 | 1 | 6 | H |
| 0 | 1 | 6 | J |
| 0 | 1 | 6 | L |
| 0 | 1 | 6 | M |
| 0 | 1 | 6 | F |
| 0 | 1 | 6 | D |
| 0 | 1 | 7 | C |
| 0 | 1 | 8 | E |
| 0 | 1 | 8 | C |
| 0 | 1 | 8 | D |
| 0 | 1 | 8 | H |
| 0 | 1 | 8 | J |
| 0 | 2 | 1 | L |
| 0 | 2 | 2 | W |
| 0 | 2 | 2 | R |
| 0 | 2 | 3 | G |
| 0 | 2 | 6 | G |
| 0 | 2 | 4 | G |
| 0 | 6 | 1 | B |
| 1 | 0 | 9 | G |
| 1 | 0 | 1 | R |
| 0 | 2 | 8 | C |
| 0 | 8 | 2 | C |
| 0 | 7 | 9 | J |
| 0 | 6 | 6 | U |
| 0 | 7 | 5 | U |
| 0 | 6 | 1 | B |
| 0 | 9 | 7 | G |
| 0 | 3 | 1 | D |
| 0 | 8 | 1 | L |

இவ்வாறு அனுப்பும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

அ)போதிய கணனிவசதி இல்லாதபோது நாடு பூராகவும் அமைந்துள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் கல்விஅமைச்சின் மாகாண மற்றும் வலய கணனிவள நிலையாங்கள், தகவல் தொடர்பாடல் நிறுவனாங்கள், தொழில்நுட்ப நிறுவனாங்கள் மூலம் இலவச சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ) இணையத்தளத்தல் விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியினை பாடசாலை பரீட்சார்த்தி அதிபரினாலும் தனிப்பட்ட பரீட்சார்த்தி சமாதான நீதவானினாலும் உறுதிப்படுத்தி அனுப்ப வேண்டும்.

இ) கற்கை நெறி பல்கலைக்கழகம் UniCode என்ற பகுதி பூர்த்திசெய்யப் படும்போது இவ்வருடம் ஒவ்வொன்றும் தனித்தனியாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

ஈ) அடையாள அட்டை ஓரேதாளில் ஒருபக்கத்தில் ஸ்கான் பண்ணி வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் பாடசாலை மாணவர் பற்றியவிபரங்கள் (பதிவு இலக்கம், சேர்ந்த திகதி, தொலைபேசி இல, பாடசாலை விலாசம்) கொண்டு செல்லுதல் வேண்டும்.

உ) UniCodes களின பட்டியல் கையேட்டில் 119 - 123 பக்கங்களில் 210 துறைகளாக காணப்படுகின்றது.

இதில் மாணவர்கள் விருப்புஒழுங்கில் எழுதப்பட வேண்டும் ஒன்று ஒரு தடவை மட்டுமே எழுதப்பட வேண்டும்.

உதாரணமாக வர்த்தகத் துறையில் படித்த மாணவர்கள் பெரும்பாலும் Uni Code ஐ பின்வரும் ஒழுங்கில் எழுதப்படவேண்டும்.


**இ.ரட்ணம்**
சிரேஷ்ட விரிவுரையாளர், சந்தைப்படுத்தல் துறை, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


# இலங்கையில் நடைபெறும் பௌத்தமத மாநாட்டிற்கு சீனா பூரண ஒத்துழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பௌத்த மத மாநாட்டிற்கு சீனாவின் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் லீயூ சியான் தெரிவித்துள்ளார்.

இலங்கை - சீன இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் அவர் உரையாற்றினார்.

இந்த வைபவம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இது 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இருநாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தி, இலங்கையின் பொருளாதார கலாசார அபிவிருத்திக்கும் உதவப்போவதாக தூதுவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சபாநாயகர் கரு ஜயசூரிய உரையாற்றுகையில்,

இலங்கை - சீன வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் இலங்கைக்கு கூடுதல் அனுகூலங்கள் கிடைத்ததாக தெரிவித்தார்.

இலங்கை நெருக்கடிகளை எதிர்கொண்ட சமயத்தில் சீனா வழங்கிய உதவிகளையும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## ஜென் குருவும் ஒன்பது திருடர்களும்

ஜப்பானில் ஒரு சிறு கிராமம் அது. அங்கு வசித்து வந்த மக்களுக்கு பெரும் தொல்லையாய் இருந்தார்கள் ஒன்பது திருடர்கள்.

இவர்களை அடக்கி, தங்களைக் காக்க பக்கத்து நகரில் வாள்வீச்சில் புகழ் பெற்றிருந்த ஜென் குரு ஒருவரை அழைத்து வந்தனர்.

கிராமத்திற்கு வந்த குரு அங்கிருந்த உணவகம் ஒன்றிற்கு சென்று சாப்பிடுவதற்காக ஒரு கிண்ணத்தில் அரிசி சாதம் எடுத்து வரச் சொன்னார்.

தன்னுடைய இருக்கையில் அமர்ந்தவர் இடையிலிருந்த வாளை உருவி தனக்கு எதிரில் வைத்து விட்டு கிண்ணத்தில் வந்த சோற்றினை வெட்டுக் குச்சியால் (சாப்ஸ்டிக்) சாப்பிட ஆரம்பித்தார்.

விஷயம் அறிந்த ஒன்பது திருடர்களும் ஜென் ஆசிரியர் சாப்பிடும் உணவகத்திற்கு வந்து யாருக்கும் தெரியாமல் பின்புறம் மறைந்திருந்து நோட்டமிட்டனர். குருவுக்கு அது தெரிந்துவிட்டது.

அப்போது அவர் தலைக்கு மேல் ஈக்கள் பறந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு முறையும் ஜென் குரு தன்னுடைய சாப்ஸ்டிக்கினை உயர்த்தி மேலே பறந்து கொண்டிருந்த ஈயினை அடித்தார், பார்க்காமலே. ஒவ்வொரு முறையும் ஒரு ஈ செத்து விழுந்தது. ஒரு முறை கூட குறி தவறவே இல்லை.

ஒன்பது முறை, ஒன்பது



ஈக்களை மிகத் துல்லியமாக அடித்துக் கொன்றார். பின்பு திரும்பிப் பார்த்தார்.

மறைந்திருந்த கொள்ளைக் கூட்டத் திருடர்கள் காணமல் போயிருந்தனர். அன்றைக்கு சென்றவர்கள்தான் அதன் பின்பு அந்தக் கிராமத்தின் பக்கமே அவர்களை யாரும் பார்க்கவில்லை!

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

02.2017 11

- 1659 - சுவீடன் படைகளின் கோப்பன்ஹேகன் நகரத் தாக்குதல் பலத்த உயிரிழப்புகளுடன் முறியடிக்கப்பட்டது.
- 1752 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது மருத்துவமனை பென்சில்வேனியாவில் திறக்கப்பட்டது.
- 1809 - ரொபேர்ட் ஃபுல்ட்டன் நீராவிப்படகுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1814 - நோர்வேயின் விடுதலை அறிவிக்கப்பட்டது.
- 1826 - லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகம் என்ற பெயருடன் அமைக்கப்பட்டது.
- 1873 - ஸ்பானிய உயர் நீதிமன்றம் (Cortes) முதலாம் அமெடியஸ் மன்னனை பதவி விலக்கி ஸ்பெயின் நாட்டைக் குடியரசாக அறிவித்தது.
- 1919 - பிரீட்ரிக் எபேர்ட் ஜேர்மனியின் அதிபராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.
- 1929 - இலாத்தரன் உடன்படிக்கை மூலமாக வத்திக்கான் நகர் உருவானது.
- 1933 - மகாத்மா காந்தி ஹரிஜன் என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.
- 1953 - சோவியத் ஒன்றியம் இஸ்ரவேலுடன் தூதரக உறவை முறித்துக் கொண்டது.
- 1960 - சீன எல்லையில் நடந்த தாக்குதல் ஒன்றில் 12 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- 1964 - சைப்பிரசில் கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்கும் இடையில் லிமசோல் என்ற இடத்தில் சமர் இடம்பெற்றது.
- 1997 - டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் விண்வெளித் தொலைக்காட்டியைத் திருத்தும் நோக்கில் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 2005 - ஜேர்மனியின் முதல் 24 மணி நேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.
- 2008 - கிழக்குத் திமோரின் அதிபர் ஜொசே ரமோஸ் ஹோர்ட்டா அவரது வீட்டில் வைத்து தீவிரவாதிகளால் சுடப்பட்டுப் படுகாயமடைந்தார்.

### பிறப்புகள்

- 1847 - தொமஸ் அல்வா எடிசன், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர். (இ. 1931)
- 1909 - ஜோசப் எல் மேங்கியூவிஸ், அமெரிக்க இயக்குனர். (இ. 1993)
- 1917 - சிட்னி ஷெல்டன், அமெரிக்க எழுத்தாளர். (இ. 2007)
- 1924 - வி. வி. வைரமுத்து, நடிகமணி, ஈழத்தின் கூத்து நடிகர். (இ. 1989)
- 1947 - யுகியோ அட்டொயாமா, சப்பானின் 60வது பிரதமர்.
- 1964 - சேரா பேலின், அமெரிக்க அரசியல்வாதி.
- 1969 - ஜெனிபர் அனிஸ்டன், அமெரிக்க நடிகை.
- 1992 - டெய்லர் லாட்னர், அமெரிக்க நடிகர்.

### இறப்புகள்

- 824 - முதலாம் பாஸ்கால் .(திருத்தந்தை)
- 1650 - ரெனே டேக்கார்ட், பிரெஞ்சுக் கணிதவியலாளர். மெய்யியலாலர். (பி. 1596)
- 1693 - ஜான் டி பிரிட்டோ, இயேசு திருச்சபை மதப்போதகர். (பி. 1647)
- 1755 - பிரான்செஸ்கோ சிப்பியோன் மாஃபி, இத்தானிய தொல்லியலாளர். (பி. 1675)
- 1942 - ஜம்னாலால் பஜாஜ், இந்தியத் தொழிலதிபர். (பி. 1884)
- 1946 - மா. சிங்காரவேலர், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தை. (பி. 1860)
- 1948 - செர்கீ ஐசென்ஸ்டைன், உருசிய இயக்குனர். (பி. 1898)
- 1963 - சில்வியா பிளாத், அமெரிக்க எழுத்தாளர். (பி. 1932)
- 1968 - தீனதயாள் உபாத்தியாயா, இந்திய ஊடகவியலாளர், அரசியல்வாதி. (பி. 1916)
- 1977 - பக்ருதின் அலி அகமது, இந்தியாவின் 5வது குடியரசுத் தலைவர். (பி. 1905)
- 1978 - ஹரி மார்ட்டின்சன், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற சுவீடியர். (பி. 1904)
- 1979 - மாயவரம் வி. ஆர். கோவிந்தராஜ பிள்ளை கருநாடக இசை வயலின் வாத்தியக் கலைஞர். (பி: 1912)
- 1985 - செ. சுந்தரலிங்கம், இலங்கை அரசியல்வாதி. (பி. 1895)
- 2006 - பெக்கி கிரிப்ஸ் அப்பையா, எழுத்தாளர். (பி. 1921)
- 2007 - சாகரன், தமிழிணைய ஆர்வலர். (பி. 1975)
- 2012 - விட்னி ஊசுட்டன், அமெரிக்க நடிகை. (பி. 1963)
- 2016 - பூ. ம. செல்லத்துரை, ஈழத்து எழுத்தாளர். (பி. 1936)

### சிறப்பு நாள்

- ஜப்பான் - நிறுவன நாள்.
- ஈரான் - இஸ்லாமியப் புரட்சி நாள். (1974)
- கமரூன் - இளைஞர் நாள்.
- ஐக்கிய அமெரிக்கா - கண்டுபிடிப்பாளர் நாள்.
- பொஸ்னியா - விடுதலை நாள்.
- வத்திக்கான் நகரம் - விடுதலை நாள். (1922)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 70 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 200 | 200 |
| தக்காளி | 80 | 100 | 70 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 80 | 60 |
| கோவா | 30 | 100 | 80 | 60 | 40 |
| கரட் | 50 | 100 | 80 | 120 | 60 |
| பூசணி | 60 | 60 | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 120 | 140 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 300 | 160 | 250 | 160 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 200 | 160 | 180 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 80 | 100 | 60 |
| பயற்றங்காய் | 300 | 300 | 40 | 240 | 200 |
| லீக்ஸ் | 60 | 100 | 160 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 100 | 600 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 300 | 120 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 1000 | 120 | 800 | 700 |
| போஞ்சி | 120 | 100 | 30 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 600 | 100 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 120 | 40 | 30 |
| தேசிக்காய் | 150 | 100 | 120 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30 | 50-70 | 50 |
| இராசவள்ளி | 200 | 100 | 200 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 60 | 100 | 60 | 120 | 200 |
| முள்ளங்கி | 50 | 100 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 60 | 80 | 70 |

அடங்காப்பிடாரியான பெண் இருந்தால் பத்து வீடுகளுக்கு நாய்களே தேவையில்லை.

- பங்களாதேஷ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கும் கிழக்கும் இணைவதற்கான அங்கீகாரம்

கிழக்கு மாகாணத்தில் வரலாறு காணாத எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நேற்றைய தினம் நடைபெற்றுள்ளது.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஒன்றுகூடி தமிழினத்தின் உரிமைக்காகக் குரல் கொடுத்துள்ளனர். அவர்களின் உரிமைக்குரல் ஈழத்தமிழர் விடயத்தில் உறங்குகின்ற சர்வதேச சமூகத்தை தட்டியெழுப்பி

இன்னும் துயிலுதியோ
வன்நெஞ்சப் பேதையர் போல்

என்று கேட்பது போல அமைந்துள்ளது.

தவிர இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும் என்பதையும் சப்புச் சவரான தீர்வு எதனையும் தமிழ்மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதையும் இடித்துரைப்பது போல கிழக்கின் எழுக தமிழ் எழுச்சிப்பேரணி அமைந்திருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

கிழக்கு மாகாணம் தமிழர்களிடமிருந்து பறிபோகிறது. இதைத் தடுத்து நிறுத்த யாருமிலையோ என்று தமிழ்ப் பற்றாளர்களின் நெஞ்சம் கலங்கிய வேளை தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடந்த கிழக்கின் எழுக தமிழ் எழுச்சி, தமிழ் இனத்தின் நிலங்களை ஆக்கிரமிப்பவர்களுக்கும் விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிந்தமையால் தமிழர்களை இனி எதுவும் செய்யலாம் என்று நினைத்தவர்களுக்கும் நல்லதோர் பதிலடியாக அமையும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

கிழக்கு மாகாணத்தில் எழுக தமிழ் எழுச்சிப்பேரணி இடம்பெறுவதைத் தடுப்பதில் தேர்தல் அரசியல் இலாபத்தில் வீழ்ந்துஉளலும் நம்மவர்கள் சிலர் கடும் பிரயத்தனம் செய்தனர். இத்தகையவர்கள் பேரணிக்கு எதிராக துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டனர்.

இதோ இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கப் போகிறது. அதற்கிடையில் இத்தகைய பேரணிகள் தேவைதானா என்று கேள்வி எழுப்பினர்.

ஆக, வடக்கில் நடந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணியைத் தடுக்க முற்பட்டவர்கள் கிழக்கிலும் அதே கயமைத்தனத்தைச் செய்தனர். இருந்தும் வீறுகொண்ட ஓர் இனத்தை அடக்கிவிடமுடியாது என்பது போல இதுகாலும் பொறுமைகாத்த தமிழ் உறவுகள் அந்தப் பொறுமையை உடைத்து எழுக தமிழ் என்ற கோசத்தோடு எழுச்சிப் பேரணியாக எழுந்தனர். கிழக்கின் வரலாற்றில் ஒரு போதும் இல்லாத ஒரு பேரணியாக எழுக தமிழ் எழுச்சிப்பேரணி நடைபெற்றமை தமிழ் மக்கள் பேரவையின் முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்பதுடன் தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்கள் சார்ந்து எடுக்கும் நடவடிக்கைகளுக்கான அங்கீகாரமென்றும் கருத முடியும்.

தவிர வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம். வடக்கும் கிழக்கும் பிரிபட முடியாத தேசம் என்பதை எழுக தமிழ் எழுச்சிப் பேரணி இந்த உலகிற்கும் இலங்கை அரசிற்கும் மீண்டும் ஒரு தடவை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

மேலும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை, காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறவில்லை, சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கப்படவில்லை என்ற பல பிரச்சினைகள் இன்னமும் தொடர்கின்றன.

இது தொடர்பிலும் சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்பதை பகிரங்கமாகக் கேட்பதாகவும் கிழக்கின் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் அலைகடலெனத் திரண்ட தமிழ்மக்களின் உணர்வுப் பிரவாகம் அமைந்துள்ளது.

இதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி மேடையில் ஏறியபோது அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகள் கரகோசம் செய்து ஆரவாரத்தோடு அவரை வரவேற்ற நிகழ்வு வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் இணைய வேண்டும் என்பதற்கான அங்கீகாரம் என்றால் அது மிகையில்லை.

ஆகவே வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்ற எழுக தமிழ் எழுச்சிப்பேரணி தமிழ்மக்களின் உணர்வு பூர்வமான- அஹிம்சை வழியிலான போராட்டம் என்பதை உணர்ந்து அதனை ஏற்று வடக்கையும் கிழக்கையும் இணைத்து உரிய தீர்வை வழங்குவது நல்லாட்சியின் தார்மீகக் கடமையாகும்.

# எனது இருபது வருட கனவு நனவாகியது

## சந்திரிகா குமாரதுங்க பூரிப்பு

(கொழும்பு)

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் லயன் முறை வாழ்க்கையிலிருந்து வெளியே வர வேண்டும் என்பதற்காகவே 1994ஆம் ஆண்டு தனது அரசாங்கத்தில் தோட்ட உட்கட்டமைப்பு என்ற புதிய அமைச்சினை உருவாக்கியதான முன்னாள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இருபது வருடங்களுக்கு அதி கமான காலப்பகுதி சென்ற போதிலும் இன்று நான் கண்ட கனவு நனவாகியு ள்ளது.

மலையக பெருந்தோட்ட பகுதியில் வாழ்கின்ற தொழிலாளர்களுக்கு தனி வீடுகளை அமைப்பதற்காக எனது அரசாங்க காலத்தில் அதிகபட்ச நிதி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டது.

ஆனால் தனி வீடுகளை அமைப்பதற்காக காணிகள் பெறுவதில் சிக்கல்கள் இருப்பதாக அன்றைய அமைச்சர்கள் என்னிடம் தெரிவித்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இளைஞன் படுகாயம்

உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டினை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியின் மருங்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதித் தள் ளியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்ததாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சரஸ்வதி வீதி இராஜகிராமத்தைச் சேர்ந்த இராஜ மனோகரன் (வயது-20) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். (இ-12-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனி காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** வட்டு வி.சி பிரதேசம், யாழ்ப்பாணக் கல்லூரி பிரதேசம், அராலி பிரதேசம், வட்டு பொலிஸ் நிலையப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** செல்வநகர், கோணாவில், ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** தெற்கிலுப்பைக்குளம் கிராமம், வெளிக்குளத்திலிருந்து குடாகச்சக்கொடிய வரை, கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வவுனியா நகரத்திலிருந்து போகஸ்வேவா வரை, **T.M.M** கல்லுடைக்கும்ஆலை, சூசைப்பிள்ளையார் குளம், ஓவியா விடுதி, **S.V.R.** அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, கீர்த்தி அரிசி ஆலை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, **CEC** கல்லுடைக்கும் ஆலை, 1ம் குறுக்குத்தெரு வவுனியா, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, நெளுக்குளத்திலிருந்து பறயனாளங்குளம் வரை, பறயனாளங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து கங்கன்குளம் வரை, பிரமனாலங்குளத்திலிருந்து பெரிய தம்பனை வரை, வவுனியா நகரம், பூங்கா வீதி, புகையிரத நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து கண்டி வீதியூடாக கற்குண்டமடு வரை, மதவு வைத்தகுளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரைக்கும், காத்தார் சின்னக்குளம், மகாறம்பைக்குளம், பூந்தோட்டம், குருமன்காடு, வைரவபுளியங்குளம், பட்டானிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரை, கூமாங்குளத்திலிருந்து நொச்சிக்குளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பெரியநொச்சிக்குளம் வரைக்கும், நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம் வரை, வவுனியா வைத்திய சாலை, வவுனியா இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா மக்கள் வங்கி, வவுனியா தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா கார்கில்ஸ் பூட் சிற்றி, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, மூன்றுமுறிப்பு விமானப் படை முகாம், மண்டரின் காமெண்ட்ஸ், **Gowloom** காமெண்ட்ஸ் இரட்டை பெரிய குளம் இராணுவ முகாம், பூ-ஓயா இராணுவ முகாம், குளோப் அரிசி ஆலை, மடுக்கந்த தொலைத்தொடர்பு நிலையம், குருமன்காடு **UNHCR,** அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஶ்ரீரங்கம் அாசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, செட்டிகுளம் தொலைத்தொடர்பு கோபுரம், செட்டிகுளம் வைத்திய சாலை, செட்டிக்குளம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** பெரியபண்டிவிரிச்சானிலிருந்துமடு வரை, தடச்சணாமருதமடுவிலிருந்து பள்ளமடு வரை, விடத்தற்தீவிலிருந்து வெள்ளாம்குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சைற்றம் நிறுவனத்தை சட்ட ரீதியாக்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளத் தயார் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்துக்கு சிவப்புச் சமிக்ஞை வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை நுகேகொடையில் நடைபெற்ற சைற்றமுக்கு எதிரான கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில், சங்கத்தின் செயலாளர் நவீன் டி சொய்ஷா இந்த அறிவிப்பைச் செய்துள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மக்கள் விடுதலை முன்னணி, கூட்டு எதிர்க்கட்சி என்பனவற்றின உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டுள்ளனர். (இ-7)

## வைரவர் ஆலயத்தில் தைப்பூச விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சாத்தாவத்தை அருள்மிகு ஞான வைரவர் ஆலயத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆலய உரிமையாளரான கே. விவேகானந்தன் குடும்பத்தினரால் வாகன ரத வெள்ளோட்டமும் தைப்பூசத் திருவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ந. திரிலோகநாதனும் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். நாலக ஜயவீர ஆகியோர் தேங்காய் உடைத்து ரத பவனியை ஆர ம்பித்து வைத்தனர்.

மேலும், ஆலய பரிபா லன சபையினரால் ஜே/138 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட முன்பள்ளிக்கு குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-3)

## இந்திய வியாபாரிக்கு ரூ.50,000 அபராதம்

(கரணவாய்)

விசா முடிவடைந்த நிலையில் வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரி ஒருவருக்கு 50,000 ரூபா அபராதம் விதித்ததுடன் ஒருவருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட் டது. பருத்தித்துறை குற்றத் தடுப்பு பொலிஸாரால் கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை திக்கம் பகுதியில் வைத்து இந்திய வியாபாரியிடமிருந்து தங்க பிஸ்கற், அமெரிக்க டொலர் என்பன மீட்கப்பட்டிருந்தன. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவரின் வழக்குத் தீர்ப்பு கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்டது. அதில் ஒரு வருடச் சிறைத் தண்டனையும் 50,000 ரூபா குற்றப்பணமும் செலுத்துமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி உத்தரவிட்டார். (இ-3, 60)

## கசிப்பு விற்ற பெண்ணுக்கு 15ஆயிரம் ரூபா அபராதம்

கசிப்பு விற்பனை செய்த பெண்ணிற்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட் டது. கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட கரவெட்டிப் பகுதி யைச் சேர்ந்த பெண்ணை நெல்லியடி பொலிஸார் கைது செய்து கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி 15 ஆயிரம் ரூபா அபராதம் வழங்கி தீர்ப்பளித்தார். (இ-3-60)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ அனைத்து பாவங்களையும் அனைத்துத் தீமைகளையும் பலவீனம் என்ற ஒரு வார்த தைக்குள் அடக்கி விடலாம். தீய செயல் கள் அனைத்திற்கும் இயக்கும் சக்தியா யிருப்பது பலவீனமே. தன்னலம் முழு திற்கும் மூலமாயிருப்பது பலவீனமே. மனி தரைப் பிறருக்குத் தீங்கிழைக்கச் செய் வதும் பலவீனமே. தாங்கள் உண்மையில் எதுவாக இல்லையோ அதை வெளிப்படுத்தும் படி மக்களைச் செய்வதும் பலவீனமே.

❖ இயற்கைக்கு அப்பால் செல்லப் போராடிக் கொண்டி ருக்குமளவிற்கு மனிதன் மனிதனாகிறான். இந்த இயற்கை அகம் புறம் இரண்டுமாகும். புற இயற்கையை வெல்வது நன்மையும் மிகுந்த பெருமையும்தான். ஆனால் அக இயற்கையை வெல்வதோ அதைவிடச் சிறப்பு வாய்ந்தது. நட்சத்திரங்களையும் கிரகங்களையும் அடக்கியாளும் விதிகளை அறிவது பெருமையும் நன்மையும்தான். ஆனால் மக்களின் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் மனவலிமையையும் அடக்கியாளும் விதிகளை அறிவது அளவில்லாப் பெருமை தரும் ஒன்றே.

# யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிங் பட்டத்திற்கான கிரிக்கெட் தொடர்

## நெடியகாடு, அளவெட்டி மத்தி வெற்றி



கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தும் யங்கம்பன்ஸ் வைரவிழா நிகழ்வின் ஒரு அங்கமான மாவட்ட கிங் பட்டத்திற்கான கிரிக்கெட் தொடரில் கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மின்னொளியில் நடைபெற்ற போட்டியில் இரண்டாம் சுற்றின் முதல் போட்டியில் மனோகரா வி.க. எதிரத்து நெடியகாடு இ.வி.க. மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மனோகரா முதலில் துடுப்பெடுத்தாடியது.

அவ்வணி 7ஓவர் நிறைவில் 5விக்கெட் இழப்பிற்கு 49 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 50என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய நெடியகாடு இ.வி.க. 6.2 ஓவரில் 50 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை எட்டியது. இரண்டாவது போட்டியில் மோதிய தும்பளை நாவலர் எதிர் அளவெட்டி மத்தி வி.க. நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய நாவலர் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 7ஓவரில் 7விக்கெட் இழப்பிற்கு 33 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. 34 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய அள வெட்டி மத்தி வி.க 5.1ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 36 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. (க)

## மத்தியஸ்தர் தர பரீட்சை-2017

வடமராட்சி லீக் மற்றும் வடமராட்சி லீக் மத்தியஸ்தர் தர பரீட்சை நடைபெற்றது.

வடமராட்சி லீக்கில் அங்கத்துவ கழகங்களின் அங்கத்தவர்கள் அல்லது லீக்கின் ஆளுகை பிரதேசத்தில் வசிப்பவர்கள் மாத்திரம் கலந்து கொள்ளமுடியும்.

நாளை ஞாயிற்றுகிழமை இமையாணன் மத்திய விளையாட்டு மைதானத்தில் காலை 7 மணி முதல் உடற்தகுதி பரிசோதனையும் தொடர்ந்து எழுத்து பரீட்சையும் இடம்பெறும். வடமராட்சி லீக் செயலாளர் அல்லது நடுவர் சங்க செயலாளரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி பரீட்சையில் கலந்து கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே.எண் 077 711 1007, 077 364 9544. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## 3ஆம் இடத்தை தனதாக்கியது கிளி.உருத்திரபுரம் வி.கழகம்



வடக்கின் சுப்பர் கிங் தொடரின் மூன்றாம் இடத்தை தனதாக்கியது கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம்.

*திக்கம் அணிக்கு எதிரான கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம். (க)*

## மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது ஆர்.சி.சி., சங்கானை கிங் வி.கழகம்



கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டின் நிறைவினை முன்னிட்டு நடத்தும் மாவட்ட கிங் பட்டத்திற்கான மாபெரும் கிரிக்கெட் தொடரில் கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை மின்னொளியில் நடைபெற்ற ஆர்.சி.சி அணி எதிர் கொம்மாந்தறை இ.வி.கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆர்.சி.சி.அணி முதலில் துடுப்பெடுத்தாடி 7ஓவர் நிறைவில் 49 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

50 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய கொம்மாந்தறை இ.வி.க 5 ஓவர் நிறைவில் சகல விக்கெட்டையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.


6ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டி மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது ஆர்.சி.சி.வி. கழகம்.

இரண்டாவது போட்டியில் சங்கானை கிங் வி.க. எதிரத்து நெற்கொழு கழுகுகள் வி.க. மோதிக் கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய சங்கானை கிங் வி.க. 7ஓவர் நிறைவில் 5விக்கெட்டை இழந்து 52ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு 53 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய நெற்கொழு கழுகுகள் வி.க. சகல விக்கெட்டுகளையும் இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது.

இறுதியில் 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டி மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது சங்கானை கிங் வி.கழகம். (க)

## உலகக் கிண்ண ரோல் போல் நான்கு மன்னார் மாணவர்கள் பங்களாதேஷ் நோக்கி பயணம்



பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் இடம்பெறவுள்ள 4 ஆம "ரோல் போல்" (ROLL BALL) உலகக்கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதற்காக மன்னார் மாவட்டத்தில் இருந்து நான்கு வீரர்கள் பங்களாதேஷிற்குப்பயணமாகவுள்ளனர்.

எதிர் வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் 4 ஆவது தடவையாக இடம்பெறவுள்ள குறித்த "ரோல் போல்" (ROLL BALL) உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதற்காக 3 யுவதிகளும் ஒரு இளைஞனும் வீரர்களாக செல்லவுள்ளனர்.

மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி யோ.திவவியா, மன்.புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் எஸ்.அருண், மன்-சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி ஏ. திவ்வியா மற்றும் மன்.புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவி எஸ்.அன்ரலின் ஆகிய வீரர்களே தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் 4 ஆவது தடவையாக இடம்பெறவுள்ள குறித்த "ரோல் போல்" (ROLL BALL) உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதற்காக பங்களாதேஷ் நோக்கி பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஆட்சி அமைக்க...

இது தொடர்பான தமிழக அரசியல் நிலவரம் குறித்து ஆளுநர் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிற்கு 3 பக்க அறிக்கையை அனுப்பி உள்ளார்.

ஆளுநரின் அறிக்கையில் கூறி உள்ளதாவது, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீராக உள்ளது. ஜல்லிக்கட்டு போட்டிகள் தமிழகம் முழுவதும் கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

அ.தி.மு.கவில் நிலவும் பிரச்சினை உட்கட்சி பிரச்சினைதான். சொத்து குவிப்பு வழக்கில் உயர் நீதிமன்றம் சில தினங்களுக்குள் தீர்வு வழங்க உள்ள சூழலில் சசிகலாவை ஆட்சி அமைக்க அழைக்க முடியாது.

அதிமுக எம்.எல்.ஏக்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனரா அவர்களின் சூழல் என்ன என்று விசாரணை நடத்துமாறு தமிழக டி.ஜி.பிக்கு உத்தரவுவிட்டுள்ளேன்.

தமிழக அரசியலில் இதுவரை இல்லாத விசித்திரமான அரசியல் சூழல் ஏற்பட்டுள்ளது. மிக விரைவில் தெளிவான ஒரு சூழல் ஏற்படும் என நம்பிக்கை உள்ளது என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-11)

# மோ.சைக்கிள்-வான் விபத்து

## அதிபரும், மகளும் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளும் வடிரக வானும் மோதி விபத்துகுள்ளானதில் நெல்லியடி மத்திய கல்லூரி அதிபரும் அவரின் மகளும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை மாலுச்சந்தி தொலைத்தொடர்பு நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற இவ் விபத்தில் கனகேஸ்வரன் கிருஸ்ணகுமார் (வயது 52) அவரது மகளான கிருஸ்ணகுமார் அபிரா (வயது 20) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

இன்றையதினம் பாடசாலையில் நடைபெறவுள்ள இல்லமெய்வன்மைப் போட்டிக்கான வேலையில் ஈடுபடுவதற்காக சென்றுகொண்டிருந்த போது வடி ரகவான் மோதியதாக கூறப்படுகிறது. இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-60)



## இலங்கையின் முதலாவது

# ஒன்றிணைந்த மின்சக்தி நிலையம் எழுவைதீவில் நேற்று திறப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் முதலாவது ஒன்றிணைந்த மின்சக்தி நிலையம் நேற்றைய தினம் எழுவைதீவில் திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இரண்டு வருட கால ஆட்சி நிறைவினை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கை அரசாங்கமும் இணைந்து 187 மில்லியன் ரூபா நிதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மின்சக்தி நிலையத்தினை மின்வலு மற்றும் மீள் புத்தாக்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பிரதியமைச்சர் அஜித் பெரேரா மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

சூரிய, காற்று மற்றும் எரிபொருள் ஆகிய மும்முகபட்ட சக்தி இணைவில் எரிபொருளை மிகுதிப்படுத்தும் சுழற்சிமுறையிலான முன்மாதிரிகையான திட்டமாக இது அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் மத தலைவர்கள், யாழ்மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், உட்பட இலங்கை மின்சார சபையின் வட பிராந்திய முகாமையாளர் மற்றும் பொது மகக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (செ-9)

# இரவு பகலாக தொடர்கிறது கேப்பாப்பிலவு போராட்டம்

## பொது அமைப்புகள் சந்தித்து ஆதரவு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்களின் போராட்டம் இன்று 12ஆவது நாளாக தீர்வின்றி தொடர்ந்து வருகிறது.

கடந்த 31ஆம் திகதி மக்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்து விமானப்படை முகாமிற்கு முன்பாக கூடாரம் அமைத்து இரவு பகலாக போராட்டத்தை அப்பகுதி பாதிக்கப்பட்ட மக்கள் முன்னெடுத்துள்ளனர்.

இந்த போராட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வரும் நிலையிலும் கூட இதுவரை எந்தவொரு உறுதியான தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

இந்த நிலையில்தான் மக்கள் தமது போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் காணி விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அரசாங்கம் அழைப்பு விடுத்தபோதும் அந்த அழைப்பை மக்கள் நிராகரித்திருந்தனர்.

பிலவுக்குடியிருப்பு பகுதியில் 84 குடும்பங்களிற்கு சொந்தமான 20 இக்கும் மேற்பட்ட காணிகளை விடுவிக்க கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றும் பல்வேறு பொது அமைப்புகள் நேரில் வந்து ஆதரவு வழங்கியிருந்தனர். அந்த வகையில் இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் தமது ஆதரவை வழங்கியதோடு இங்குள்ள நிலையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் இந்நிலை தொடருமானால் தாம் படிப்படியாக முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்கள் மாணவர்களையும் இணைத்து போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவுள்ளதாகவும் படிப்படியாக மாகாணம் நாடளாவிய ரீதியில் மாபெரும் போராட்டங்களை செய்ய எண்ணியுள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதனைவிட மத தலைவர்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஆகியோரும் வருகை தந்து தமது பூரண ஆதரவை வழங்கியதோடு எவ்வேளையிலும் தமது ஆதரவை வழங்க தயார் எனவும் உறுதியளித்துள்ளனர். (செ-281)

# நீர் மூலம் பெறப்படும் மின்சாரத்தில் அரைப்பங்கை இழக்கும் அபாயநிலை

# ஒன்றிணைந்த மின்சக்தி திட்ட நிகழ்வில் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் உரை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட வறட்சி காரணமாக நீர் மூலம் பெறப்படும் மின்சாரத்தில் அரைப்பங்கை இழக்க வேண்டிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்

இலங்கையில் முதலாவது ஒன்றிணைந்த மின்சக்தி நிலைய திறப்புவிழா நிகழ்வு நேற்றைய தினம் எழுவைதீவில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசு கொண்டு செல்கின்ற இந்த அபிவிருத்தி நடவடிக்கையில் எமக்கு வடக்கும் தெற்கும் ஒன்றுதான். அபிவிருத்தியை குறிக்கோளாக கொண்டு நல்லாட்சியை நடத்தி செல்கிறோம். அதற்கு மக்களின் பங்களிப்பு அவசியம்.

இந்த ஒன்றிணைந்த மின்சக்தி திட்டமானது சூரிய, காற்று, எரிபொருள் சக்தியும் இணைந்து மும்முகப்பட்ட இணைவில் நாட்டுக்கு முன்மாதிரிகையான திட்டமாக உள்ளது.

ஒரு அலகை பெற்றுக்கொள்வதற்கு ஆரம்பத்தில் எரிபொருள் மூலமாக பெறப்பட்ட செலவு 60 ரூபாவாக இருந்தது. தற்போது எரிபொருளை பயன்படுத்தாது சூரிய சக்தி அல்லது காற்று சக்தியினை பயன்படுத்தி பெறும்பொழுது அந்த அலகை 9 ரூபாவிற்கு பெற்றுக்கொள்ள முடிகிறது. அந்த வகையில் இயற்கையின் சக்தியை பயன்படுத்தியுள்ளோம்.

இத்திட்டம் நீண்டகால தூரநோக்குடைய திட்டமாக காணப்படுகிறது. இது எமது எதிர்கால சந்ததியினருக்கும் பயன்பெறக்கூடியதான ஒரு திட்டமாக முன்கொண்டு செல்கிறோம்.

இலங்கை மின்சார சபை நஷ்டத்தில் இயங்குவதான கருத்துக்கள் தவறானவை. இது மக்களுக்குரிய சேவை செய்கின்ற நிறுவனம். மக்களுக்குரியசேவைகளை செய்யும் போது அடிப்படை மூலதனங்களை இழக்க வேண்டிய உள்ளது.

இதுவரை மின்சாரத்தை பெற்றுக்கொள்ளாத 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. வடக்கில் 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் புதிதாக மின்சாரத்தை பெற்றுக்கொண்டதனால் கல்வியில் சிறப்பாக செயற்பட்டு வருகிறார்கள் என்ற புள்ளிவிபரம் உள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வறட்சி காரணமாக, நீரின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தில் 50 வீதமான மின்சாரத்தை இழக்கக்கூடிய அபாயமுள்ளது. இது இயற்கையால் ஏற்பட்ட இழப்பு. இதனால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்கு எரிபொருளை பயன்படுத்த வேண்டி உள்ளது எனவே வேறு உத்திகளையும் பயன்படுத்த வேண்டியுள்ளது. குறித்த செலவை ஈடு செய்ய இவ்வாறான புதிய திட்டங்களை ஆரம்பித்துவருகிறோம். அதற்கு அனைவரும் உதவியாக இருக்க வேண்டும்.

நாம் இன மத கலாசார வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு செயற்படும் போது வாழ்க்கையின் அர்த்தத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

நல்ல நோக்கத்துக்காக ஆரம்பிக்கும்திட்டத்தில் இடையூறு இல்லாதவாறு மக்கள் செயற்படும் போது தான் அதனுடைய வெற்றியை நாம் கண்டு கொள்ள முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-9)



## வடக்கு முதல்வருக்கு...

கூடியதாகவிருந்தது.

நேற்றை தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற எழுக தமிழ் மக்கள் எழுச்சியில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உரையாற்றுவதற்கு மேடையேறியிருந்தார்.

அப்போது அவரை கண்ட அங்கு கூறியிருந்த பெருந்திரளான மக்கள் கைதட்டி ஆர்ப்பரித்து தமது அமோக வரவேற்பினை தெரிவித்திருந்தமையை நிகழ்வில் சிறப்பான ஒரு பதிவாக காணக்கூடியதாக விருந்தது. (செ-9)

# பயங்கரவாதிகள்...

விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற எழுக தமிழ் பேரணியின் பிரகடனம் வாசிக்கப்பட்ட பின்னர் முதல்வர் உரையாற்றினார்.

அங்கு தொடர்ந்து பேருரை யாற்றிய அவர்,

உறங்குபவர்கள் போல பாசாங்கு செய்பவர்களை உசுப்பி உலுப்புவதே இந்த எழுக தமிழின் நோக்கம்.

பச்சத்தண்ணி கொண்டு முகத்தில் தெளித்தால் அவர்கள் எழும்பக் கூடும், எங்கள் நடவடிக்கைகள் பிழை என்றும் நாட்டின் இயல்பு நிலையைக் குழப்புகின்றோம் என்றும் எங்கள் மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.

நாங்கள் வாய் பேசாது மௌனிகளாக இருந்தால் அல்லது பெரும்பான்மையினரின் விடயங்களுக்கு ஒத்தூதினால் எங்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் கிடைக்கும்.

துணிந்து நின்று எமது பிரச்சினைகளைக் கூறினால் அது எமது ஒற்றுமையைச் சீர் குலைக்கும் செயல்கள் என்று கூறுகின்றார்கள்.

ஆக மொத்தம் எமக்கு எது தேவை என்பதிலும் பார்க்க தாங்கள் எதை விரும்புகிறார்களோ அதுவே எங்களுக்குத் தரப்படும் என்பதிலே குறியாக இருக்கின்றார்கள் பெரும்பான்மையின அரசியல்வாதிகள்.

இன்னும் சில காலம் போனால் எங்களைப் பயங்கரவாதிகள் என்றும் கூறிவிடுவார்கள்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் அமுலில் இருந்து வருகின்றது. அதில் ஒரு அம்சம் பற்றி நான் தெளிவுபடுத்துவது நன்மை பயக்கும் என நினைக்கின்றேன்.

ஒருவரை கொல்வது அல்லது அடித்துத் துன்புறுத்துவது எங்களது குற்றவியல் சட்டத்தின் கீழும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் குற்றமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குற்றச் செயலை இனங்கண்டு குற்றச் செயலாக அல்லது பயங்கரவாதச் செயலாக நிர்ணயிப்பதற்கு அடிப்படை வரையறைகள் எவையும் சட்டத்தில் கூறப்படவில்லை.

இதனை, அரசு அரச அதிகாரிகள் பொலிஸார் இராணுவத்தினர்தான் தீர்மானிக்கின்றார்கள்.

இங்குதான் எம்மக்கள் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்படுகின்றார்கள்.

அரசு நினைத்தால் ஒருவர் பயங்கரவாதி. இல்லையேல் அவர் ஒரு சாதாரண குற்றவாளி. முன்னர் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு குற்றங்காணப்பட்ட ஒருவர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாரேயானால் அவை எவ்வாறு அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்றோ அவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட பின்னரே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒருவருக்கு குற்றப் பத்திரிகை தயாரிக்கலாமென்றோ சட்டத்தில் கூறப்படவில்லை.

அரசின் சாட்சிகள் ஒருவரைப் பயங்கரவாதி என்று அடையாளப் படுத்தினால் அதனை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்கின்றன.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் மற்றைய வழக்குகளில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஆனால் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அதை மட்டும் வைத்து இளைஞர்கள், யுவதிகள் குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளார்கள்.

குற்ற ஒப்புதல் கூறும் குற்றமானது உண்மையில் நடந்தேறியதா என்பதைக் கூட நீதிமன்றங்கள் ஆராய்ந்து பார்ப்பதில்லை. அவ்வாறு அறிந்து கொள்ள நீதிமன்றங்கள் சிரத்தை எடுப்பதுமில்லை. அவ்வாறான ஏற்பாடுகள் சட்டத்திலும் இல்லை. இவை என்னுடைய பலவருட நீதித்துறை சார்ந்த அனுபவங்கள்.

இதனை ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் உரிமைகளுக்காக குரல் கொடுப்போர் ஆட்சியாளர்களின் சட்டத்தின் பார்வையில் குற்றவாளிகள்.

அன்று வெள்ளையனே வெளியேறு என்றவர்கள் வெள்ளையன் வெளியேறியதும், அவர்கள் வெள்ளையனின் பார்வையில் துரோகிகளாகவும் சிங்கள மக்களின் பார்வையில் வீரபுருஷர்களாகவும் ஆனார்கள்.

இப்பொழுது எங்களைப் பயங்கரவாதிகளாகப் பார்க்கும் எமது சிங்கள சகோதரர்கள் எமது உரிமைகளுக்காக நாம் குரல் கொடுப்பது குற்றச் செயல் அல்ல. அது தேசத்துரோகமல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் எங்கள் இராணுவத்தை வடக்கு கிழக்கில் நிறுத்தியுள்ளோம், பயங்கரவாத தடைச் சட்டத்தை அமுலில் வைத்திருக்கின்றோம், 6வது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டத்தையும் தொடர்ந்து அமுலில் வைத்திருக்கின்றோம். பன்னாட்டு அரசாங்கங்களின் பரிந்துரைகளைப் பெற்றுள்ளோம், இவ்வாறிருக்கும்போது நீங்கள் உங்கள் உரிமைகளைக் கேட்கின்றீர்கள் என்றால் நீங்கள் பயங்கரவாதிகள் அல்லாமல் வேறு யார் என்றுதான் தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது.

உரிமைகள் அற்றவர்கள்தான் உரிமைகளையும் உரித்துக்களையும் கேட்பார்கள். எமக்கான உரிமைகள் இருந்திருந்தால் ஏன் வெயிலில் கருகி குளிரில் கொடுகி மழையில் நனைந்து போராட வேண்டும். அவை இல்லாததால் தான் இந்தப் போராட்டம்.

இதனை சிங்கள சகோதர, சகோதரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடுமையான சட்டங்களாலும் இராணுவப் பிரசன்னங்களாலும் அரசியல் யாப்பு அனுசரணைகளுடனும் உரிமை மறுப்பைச் சாதித்து வந்துள்ளார்கள்.

சர்வதேச பிரசன்னம், அரச சார்பற்ற நிறுவனங்கள், வெகுஜன ஊடகங்கள் எவருடைய பிரசன்னங்களும் இல்லாது இறுதிப்போர சர்வதேசப் போர் விதிகளுக்கு மாறாக மேற்கொள்ளப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை சிங்கள மக்கள் உட்பட முழு உலகுமே அறியும்.

இறுதி யுத்தத்திலே விடுதலைப் புலிகள் மட்டுமல்ல சாதாரண அப்பாவிப் பொதுமக்கள் பெருவாரியாகக் கொல்லப்பட்டார்கள்.

கொல்லப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கை எந்தவித மனச்சாட்சியும் இல்லாது மிக சொற்ப தொகையாக திரிவுபடுத்தப்பட்டு சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டப்பட்டது.

இதனால் விளைந்ததுதான் சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை முன்மொழிவு.

இதனை சர்வதேசமும் இலங்கை அரசாங்கமும் ஒன்றிணைந்து ஏற்றுக் கொண்டார்கள்.

இருந்த போதிலும் இலங்கை அரசாங்கம் ஒன்றரை வருடங்கள் கழிந்து விட்ட நிலையிலும் ஒன்றும் செய்யவில்லை.

கேப்பாப்பிலவில் காட்டர்ந்த நிலங்களை ஏக்கர் ஏக்கராக கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர் படையினர்.

அவற்றிலே மக்களின் உறுதிக் காணிகளும் அடங்குகின்றன.

மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்று குடியமர்வதற்கு முப்படையினரும் தடையாக உள்ளார்கள்.

இதனை மக்கள் எதிர்த்தால் துன்புறுத்தப்படுகின்றார்கள்.

ஏன் இப்படி என்று கேட்டால் அது பாதுகாப்பு ஏற்பாடு என்கின்றார்கள். யாரின் பாதுகாப்புக்காக அந்த அடாவடித்தனம்? எங்கள் பாதுகாப்பா? உங்கள் பாதுகாப்பா? அல்லது அரசியல்வாதிகளின் பாதுகாப்பா? என்று கேட்டால் அதற்குப் பதிலில்லை.

எங்களுக்கு உங்கள் பாதுகாப்புத் தேவையில்லை என்று திரும்பத் திரும்பக் கூறுகின்றோம்.

போதிய பொலிஸார் இருந்தால் அவர்கள் பாதுகாப்புக்கு அவர்கள் பொறுப்பாக இருப்பார்கள் என்று கூறினால் அவர்கள் செவிசாய்க்கின்றார்கள் இல்லை.

அவர்கள் கையகப்படுத்தியுள்ள பொதுமக்களின் காணிகளின் விஸ்தீரணங்களைப் பார்த்தால் இன்னும் 500 அல்லது 600 வருடங்களுக்கு அவர்கள் இங்கு நிலைகொண்டிருக்கப் போகின்றார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-5)

## "எழுக தமிழ்"...

புலத்திலும் தமிழர் தாயகத்திலும் தமிழகத்திலும் பல நூறு அமைப்புக்களின் ஆதரவுடன் நடைபெற்ற இந்த பேரணியில் வடக்கு, கிழக்கை சேர்ந்த பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டு கட்சி பேதமின்றிய ஆதரவு வழங்கியிருந்தனர். மேலும் நேற்றைய தினம் அவசர தேவைகள் தவிர்ந்த எவையும் நடைபெறமாட்டாது எனவும், வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடுவதற்கு வர்த்தகர்கள் சுயமாக முடிவெடுத்து பேரணிக்கு ஆதரவாக கடைகளை பூட்டியிருந்தனர்.

முற்பகல் பத்து மணியளவில் கல்லடி பாலத்திற்கு அருகாமையில் வடக்கு முதலமைச்சரின் கொடி அசைப்புடன் ஆரம்பமாகிய குறித்த பேரணி சுமார் இரண்டு மணித்தியாலங்கள் பேரணியாக சென்று விவேகானந்த மைதானத்திற்கு சென்றடைந்தது. இதன் போது பேரணி சென்ற வழியில் பொது மக்களின் தாகத்தை தீர்ப்பதற்கு விளையாட்டு கழகங்கள், வர்த்தக சங்கங்கள், தண்ணீர் வழங்கி ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். பேரணி மைதானத்தை சென்றடைந்ததும், முன்னாள் போராளியான அங்கவீனமுற்ற ஒருவர் ஈகைச்சுடர் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவராகிய வசந்தராஜா, இப்பேரணியின் பிரகடனத்தை நிகழ்த் தினார். சகல விதமான அனுமதிகளும் பெற்று, போக்குவரத்து ஒழுங்குகளுக்கான பொலிஸ் ஏற்பாடுகளுடன நடைபெற்ற இப்பேரணியை, இறுதி நேர பொய்ப் பிரசாரங்கள் மூலம் குழப்பமுனையும் சக்திகளை மக்கள வழமை போல் உதாசீனம் செய்து, தமது வரலாற்றுக் கடமையை இத் தருணத்தில் செவ்வனே செய்து, எமது இனத்தின் இருப்பை காப்பாற்றிக் கொள்வதற்காக பல்லாயிரக் கணக்கில் அணி திரண்டிருந்தனர்.

யுத்தத்திற்கு பின்னர் நல்லாட்சி அரசு என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு எல்லாவற்றையும் வழங்குவதாக கூறிவரும் அரசுகள் இதுவரை பெரிதாக எதனையும் சாதிக்கவில்லை. மாறாக, யுத்தத்திற்கு முன்னர் எவ்வாறு தமிழர் தாயக பகுதிகள் சிங்கள மயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டு வந்தனவோ அவ்வாறு போன்று தற்போதும் தொடரும் நிலை காணப்படுகின்றது. யுத்தத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கு முழுமையான பொறுப்புக் கூறலை தமிழ்த்தரப்பு எதிர்பார்த்துள்ள போதிலும், அதனை நிராகரித்து சர்வதேச சமூகத்திடம் நற்பெயர் பெறுவதிலேயே தற்போதைய ஆட்சியாளர்கள் முயன்று வருகின்றனர். ஆகவே எங்கள் கோரிக்கைகளை சர்வதேச அரங்கில் மக்கள் குரலாக ஒலிப்பதற்கு தமிழ் சமூகம் திரளவேண்டும் என அறிவிப்புச் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்றைய அரங்கில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு தமது உரிமைக் கோசங்களை பலமாக முரசறைந்திருந்தனர். (இ-4)

## கிணற்றிலிரு...

தேசத்தில் பாழடைந்த கிணறு ஒன்று தூர்வாரப்பட்ட போது அதில் இருந்து வெடிபொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வெடிபொருட்களானது சாவகச்சேரி சரசாலை கனகம்புளியடி பிரதேசத்தில் உள்ள காணியொன்றில் அமைக்கப்பட்டுள்ள கிணற்றில் இருந்தே மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசத்தில் உள்ள மேற்படி காணியானது நீண்ட காலமாக இராணுவத்தின் முகாம் அமைந்திருந்த பகுதியாக இருந்தது. இந்நிலையில் இராணுவத்தினர் காணியைவிட்டு வெளியேறிய நிலையில் காணியானது கவனிப்பாரற்று காணப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே நேற்றைய தினம் குறித்த காணியின் உரிமையாளர் தனது காணியை துப்புரவு செய்து கிணற்றினையும் தூர்வாரியிருந்தார். இதன்போதே கிணற்றுக்குள் இவ் வெடிபொருள்கள் இருப்பது அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து இது விடயமாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து இவ் வெடிப்பொருட்களை பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரது உதவியுடன் மீட்டிருந்தனர்.

அக் கிணற்றில் இருந்து இரு கைக்குண்டுகளும், ஒரு கிளைமோர் குண்டும், ஒரு செல் மற்றும் இரு மிதிவெடிகளும் மீட்கப்பட்டுள்ளன. (செ-4-60)


நடமாடும் மிருக வைத்திய சேவை
சுன்னாகத்திற்கு அண்மையில் மிருக வைத்திய சேவைகளுக்கு...
தொடர்பு: Dr.K.கிருபாகரன்
cell : 077 973 8802
கதிரமலை வீதி, சுன்னாகம். (7898)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

சிங்கப்பூரில் பணிப்பெண் வேலை
சிங்கப்பூரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இஞ்சினியரின் வீட்டில் குழந்தைப்பராமரிப்புடன் வீட்டுவேலைகளையும் செய்யக்கூடிய 50 வயதுக்கு உட்பட்ட தேக ஆரோக்கியம் மற்றும் நல்ல பண்புகள் கொண்ட பெண் ஒருவர் உடனடியாகத் தேவை.
குறிப்பு - முந்துபவர்களுக்கு முன்னுரிமை
சம்பளம்- 35,000/= இலங்கை ரூபா
தொடர்புகளுக்கு:
49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226236 (C-7519)

தேவை
திருநெல்வேலியிலுள்ள எமது பட்டய கணக்காளர் நிறுவனத்தில் கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன
01. கணக்கியல் பயிலுநர்கள்- A/L வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்தோர், Chartered, CIMA, HNDA Students.
02. சிறிய விடுதிக்கு சமையல் வேலை தெரிந்த இரவு/பகல் நேர ஆண் தொழிலாளி.
தொடர்பு : 077 953 0496, 021 222 2478 (7913)

A/L 2018, 2017 துரித மீட்டல்
அரசியல் : T.திருமுருகன்
• MCQ-1000 கடந்த கால வினாக்கள்
• கட்டமைப்பு வினா, கட்டுரை வினா
• பாடம் மாறியவர்களுக்கு தனிப்பிரிவு
• 06 மாதத்தில் பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்
GAQ,B.A வகுப்புக்கள்
ஆரம்பம் - 12.02.2017 ஞாயிறு 9 மணி
மேலதிக தொடர்பு - 077 217 0065
ஐடியல் கல்லூரி - மானிப்பாய்
கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி (7914)

விற்பனைக்கு
பழைய தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 172 8141 (C-7518)

தவறிவிட்டது
த.பிரபாகரன் என்பவரின் தே.அ.அட்டை (810253290V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கிளிநொச்சி - சங்குப்பிட்டி - கைதடி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0718724067, 0782824067 இலக்கங்களில் ஒன்றுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். (சன்மானம் வழங்கப்படும்)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
021 221 5656
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் (C-7512)
எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்

Win Repair
A/C களும், சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648942 (7916)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.